# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 115 இதழ்: 11,12 26-3-1989 ஈஸ்டர் சிறப்புமலர் ரூபா 3-00 இலங்கையின் ஓரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


### அங்கீகாரம்

இதுவரை காலமும் நம் மக்களால் ஆசாரத்துக்குரியவர் என அழைக்கப்பட்ட யோசவ் வாஸ் முனிவரை ஏப்ரல் 4-ம் திகதி திருச்சபை ஆசாரத்துக்குரியவர் Venerable என உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும் நிகழ்ச்சி உரோமில் நடைபெறும்.


University of Jaffna, Sri Lanka
RECEIVED
1989-4-3
Periodicals Division
Library


"பாதுகாவலன்" வாசக அன்பர்களுக்கு

'அல்லேலூயா'

## ஈஸ்டர் வாழ்த்துக்கள்

உள்ளே...


சாவே, உன்... பக். 6
அருள்திரு இராயப்பு மா. ம. தி.

பாஸ்கு மறை... 5
அருள்திரு அதிரியான் யோசப் அ. ம. தி.





✻ ஈழமண்ணில் கிறிஸ்துவின் உயிர்ப்பு — எமக்கு பாவம், அடக்குமுறை, அழிவு, இழப்பு, சுயநலம், ஒற்றுமையின்மை, தான்தோன்றித்தனம் போன்ற அடிமைத்தனங்களில் இருந்து விடுதலை தரும் கிறிஸ்துவின் ஒளியாக மாறவேண்டும்.

✻ மண்டை ஓடுகளையும் எலும்புக்கூடுகளையும் ஞாபகச் சின்னங்களாக்கிவிட்டோம்.

✻ இழப்புக்களையும் ஈடுசெய்ய முடியாத அழிவுகளையும் அனுபவங்களாக்கியுள்ளோம்.

✻ நாற்பது ஆண்டுகளின் பின்னரும் இன்றும் தமிழ் சமூகம் உடல் உளக் குறைபாட்டில் வாழப்பண்ணிவிட்டோம்.

✻ நடந்துவிட்ட விளைவுகளின் தாக்கங்களினால், எம்மை முன்பு போல வாழவிட்டாலே போதும் என்ற ஏக்கத்திலே வாழுகிறோம்.

✻ நினைத்தபடி நினைத்த இடம் நினைத்த நேரம் இனி எப்போ போவோம் என்கிறோம்.

✻ அனுபவங்களுக்கு அர்த்தம் காணாத போது இழப்புக்களை ஈடுசெய்ய முடியாதபோது இறைவனடமும் நீதிகேட்டுத் தோற்றுவிடுகிறோம்?

✻ செல்லுமிடமெல்லாம் யேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம் (2கொரி.4:11)?

பாடுகள் — மரணம் — உயிர்ப்பு அனுபவம் = அழிவு — வாழ்வின் ஆரம்பம்
இதுவே எமது பாஸ்காவாகட்டும்.

### உயிர்த்தெழுங்கள்!

எல்லோர்க்கும் உணவளிக்கும்
உழைப்பாளத் தோழர்களே!
உலகமிது உங்களதே
மார்தட்டிப் புறப்படுங்கள்
அறியாமைக் கல்லறையில்
இக்கணமே உயிர்த்தெழுங்கள்!

பொய்யையே கல்வியென்று
பரீட்சைக்குப் படிக்கின்றீர்;
உண்மையாம் அறிவினைச்
சமூகத்தில் படிப்பதற்கு;
உத்தியோகக் கல்லறையில்
மாணவரே உயிர்த்தெழுங்கள்!

சந்திக்குச் சந்தி நிற்கும்
திரளான இளைஞர்களே!
சமுதாயம் உங்கள் கையில்
சிந்தனையில் தெளிவுபெற்று;
சந்திக்கப் புறப்படுங்கள்
சிதைவிட்டு உயிர்த்தெழுங்கள்!

ஆசையூட்டி வரலாற்றுப்
பெருமைக்குத் தீயைமூட்டி
வாழவேண்டாம் கன்னியரே!
வளமான வாழ்வு உண்டு
சனம்காணப் புறப்படுங்கள்
கண்ணியத்தில் உயிர்த்தெழுங்கள்!

பூசைவைத்தல் - செபம்சொல்லல்
'' கைப்பிடித்தல் '' - மட்டுமுங்கள்
கடமைகளாய் ஆகவேண்டாம்;
மாற்றமொன்று காணவேண்டும்
மரபுகளைச் சீர்தூக்கி
குருகுலமே உயிர்த்தெழுங்கள்!

கருத்தாழம் மட்டுமிந்த
சமூகத்தை மாற்றாது;
அடித்தளமே மாறவேண்டும்
எழுத்தாளத் தோழர்களே!
அதற்கான துணிவோடு
அனைவருமே உயிர்த்தெழுங்கள்

' சுரண்டல் ' கல் பதவிக்கல்
' சாதி ' க்கல் சேர்ந்தமைந்த
வாழ்க்கை ' க் கல்லறையை நீர்
தகர்த்தெறிந்து புறப்படுங்கள்;
சமத்துவத்தை செயற்படுத்த
சத்தியத்தில் உயிர்த்தெழுங்கள்!

சம - கண்ணன்

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வாரிக் காட்சி



கல்வாரிமலே, சபாலமலே என்ற கடின கருத்துப்படஅழைக்கக் கூடிய அளவிற்கு வெறுமை- வரட்சி- கொடுமை தாண்டவமாடுகின்றன அங்கு கழுகுகள் வந்து தங்குவதற்குக் கருங்கற்கள் ஈரமற்ற நெஞ்சுடையோர் போன்று காட்சியளிகின்றன அந்தக்கற் பாறை நடுவில், கொலு எழுந்து நிற்கும் தனிப்பெரும் சிலுவை ஒன்றும் அதன் அக்கமும், பக்கமும், துணைக்கரம் கொடுத்து நிற்கும் வேறு இரண்டு சிலுவைகளும், வரலாற்று ஓடடத்தையே ஒரு கணம் தடுத்து நிறுத்தி வாதையுறும் வள்ளலின், வகை தெரியாத துன்பத்தைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

நடுச்சிலுவை மரத்தில் நாதியற்றுத் தூஙகும் நாயகனைப் பாருங்கள். புன்சிரிப்பும் புனிதமும் கலந்த அந்தப் புனிதரின் வதனத்தில், புகார் படிந்து விட்டது. வரண்ட தரையில் ஆற்று நீர் வெள்ளம் அசைந்தோடுமாப்போல், இரத்தக் கறை படிந்திருக்கிறது இறைவனுடைய திருமுகத்தில் பூமுகத்திற்குச் சாந்தி ஒளி கொடுத்த காந்தக் கண்கள். ஏந்தல் கிறிஸ்துவின் வேதனையை எடுத்தியம்புகின்றன. நீண்டுசெழித்து, நிகரற்ற அழகோடு, நித்தியன் கிறிஸ்துவின் எழிலுக்கு எழிலூட்டிய கருங்கூந்தல், இரத்த வெள்ளத்தில் தோய்க்கப்பட்டு, இங்கு கசிந்தும், அங்கு பொசிந்தும், எது இரத்தம் எது கூந்தல் என்று சொல்ல முடியாத வகையில் சீர் ழிழந்து காணப்படுகின்றது.

மலர் முடியோ - மணி முடியோ அணிந்து மன்னனென்று காட்டவேண்டிய கிறிஸ்துவிற்கு, முள்முடி சூட்டப்பட்டு, முத்து முத்தாக இரத்தம் கக்கிக்கொண்டிருக்கிறது ஆலயத்திலும் அலைகடல் ஓய்ந்தொழியும் கடற்கரையிலும், மலையிலும், முடக்கிலும் மூச்சுடன் நின்று இறைவனுடைய பெயரால் பேச்சுக் கொடுத்தவர், இப்பொழுது மரத்தில் எழுந்து ஆணிகளில் தொங்கி, அங்கம் அசைக்க வகையற்று. அவதியுறுகின்ருர் ஐயோ! ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக, பாவிகளுக்கு மன்னிப்பு அளிப்பதற்காக, கோழைகளுக்குத் திடன் கொடுப்பதற்காக, ஓடித்திரிந்த கால்கள், இருப்பாணிகளால் துளைக்கப்பட்டு, சிலுவை மரத்தில் பொறிக்கப்பட்டு, உடலின் கனத்தால் நொறுக்கப்படுகின்றன களங்கமற்ற பாலகரைக் காதலுடன் அரவணைத்த கடவுளின் திருக்கரங்கள் கயவர்களின் இருப்பாணிகளிலே கதியடைந்துவிட்டன. அலைகடல் இரைச்சல் மத்தியிலே அழிந்துபோகும் குமிழியின் சத்தம் எப்படியோ, அப்படியே அரக்க குணம் படைத்த அக்கிரமிகளின் கூச்சல் மத்தியிலே, ஆண்டவன் கிறிஸ்துவின் மூச்சும், தந்தையை வேண்டும் பேச்சும் தொனிக்கின்றது அது மூச்சா? இல்லை. பாரச்சுமை ஒன்றினுல் நெருக்கப்பட்டு, பதட்டமுறும் ஒருவன், அந்தச் சுமையிலிருந்து விலக எவ்வளவோ தெண்டிப்பானே, அதே போலத்தான் ஆணிகள் அறைந்தபடியால் அசைக்கமுடியாத கால்களையும், கரங்களையும், மெதுவாக மேலெழுப்பியும்சடுதியாகக்கீழ் விழுத்தியும், அவதிப்படுகிருர் அமலன் கிறிஸ்து இதையெல்லாம் பார்த்து இருண்டு போகிறது வானம்.

இத்தனையும்.போதாதென்று திரண்டு நிற்கின்றனர் மக்கள் ''நீ கடவுளுடைய மகனுனல், சிலுவையை விட்டுக் கீழே இறங்கு'' மற்றவர்களை இரட்சித்தவன் தன்னைத் தானே காப்பாற்றட்டும்'' என்று கரகோஷம் எழுப்பும் கயவர்கள் கூட்டம் ஒருபுறம். ''கருணைக்கடலே, கண்ணீரும் செந்நீரும் கலந்து வடித்து எப்பாவப்புண்ணீரைப் புனிதமாக்கப்போகின்ருய்'' என்று புலம்பி நிற்கும் புனிதர்களின் கூட்டம் மறுபுறம். இத்தனையும் நிறைந்ததுதான் கல்வாரி மலை. அத்தனைக்கும் ஊடாக, அழகு சிதைந்து அருள் நலிந்து உடலும் உருக்குலைந்து படும் மரமாய், பாழடையும் ஓவியமாய், பார்ப்போர் நெஞ்சைத்தொடும் சோகத்தின் சின்னமாய், துஞ்சி - துவண்டு- துடிதுடிக்கின்ருர், தூயவர் கிறிஸ்து ''இதோ மனிதனைப் பாருங்கள்.''

ம. பேபிஞ வின்சஸ்லோஸ்,

## சிலுவை

வாழ்வதற்கு வலியிழந்து
வருந்தி மாயும் இதயமே
மீள்வதற்கு பாதை தந்து
மேலுயர்ந்த சிலுவை பார்

வளர்வதற்கு கொம்பிலாது
வதங்கி வாடும் இதயமே
ஏங்கியுள்ளம் வீழ்ந்திடாது
ஏந்துகின்ற சிலுவை பார்

உலக மாயக் கடலிலாழ்ந்து
உருக் குலைந்த இதயமே
அலையடங்கும் கரைகடந்த
அன்பு பொங்கும் சிலுவை பார்

ஒளியிழந்து இருள் கவிந்து
உயிரொடுங்கும் இதயமே
வழியும் உண்மை வாழ்வு மீந்து
வாதை போக்கும் சிலுவை பார்

வா. யூலின் குரூஸ்
பேசாலை.

## சிந்தனைத் துளிகள்

''கடவுள் உன்னேடு இருக்கும் வரை — உனக்குத் தோல்வியில்லை! ஆண்டவனுக்கு மறு பெயர் ''வெற்றி''.

''சில திருவுருவங்களை உன் அறையில் தொங்க விட்டால் மட்டும் போதாது! உன் அந்தரங்க ஆன்மாவிற்குள்ளும் அது தொங்கவேண்டும்.''

''உனக்கு உலகத்தை பார்க்க அச்சமாக இருந்தால் —இறைவனின் கைகளுக்குள் உன் முகத்தைப் புதைத்துக் கொள்.''

## குருவாகும் ஒரு செபமாலைத்தாசர்



1989, மார்ச் மாதம் 30-ம் நாள் காலை 9 30 மணியளவில் அருட் சகோ. ஜீட் CR. (ராஜா குலாஸ்) அவர்கள் மன்னர் ஆயர் பேரருள்திரு தோமாஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினுல். மன்னர் பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவார்.

சகோ. ஜீட் அவர்கள் 25, மாசி, 1956 இல் மன்னர் மாவட்டத்திலுள்ள வங்காலை என்னும் ஊரில் திருவாளர் சந்தியா குலாஸ் திருமதி சலோமை பர்னுந்து தம்பதியருக்கு மகனுகப் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வங்காலை மகாவித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்ருர்.

1975-ம் ஆண்டு செபமாலைத் தாசர் சபையில் சேர்ந்த இவர், தனது குருத்துவப் படிப்புக்காக இந்தியாவுக்குச் சென்று, மெய்யியலை பெங்களூரில் உள்ள தர்மாரம் கல்லூரியிலும் இறையியலை கர்மலாரம் இறையியல் கல்லூரியிலும் கற்று 30-9-1988 இல் ஹைதரபாத் இல் உள்ள புனித ஜோன்ஸ் மாகாணக் கல்லூரியில் திருத்தொண்டர் பட்டம் பெற்ருர்.

இவர் தனது முதல் திருப்பலியை, வங்காலை புனித அன்னம்மாள் தேவாலயத்தில, 1989 பங்குனித் திங்கள் 31-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் ஒப்புக் கொடுப்பார்.

## பழையதும் புதியதும்

ஆதியிலே இறைவன் மனிதனைப் படைத்து உலகிலுள்ள அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினுர். ஆனுல் மனிதனே இறைவனுக்குக் கீழ்ப்படிய மறுத்து விட்டான். அதன் பயன் நோய், துன்பம், சாவு போன்றவற்றிற்கு ஆளானுன். இவற்றில் இருந்து விடுபட பல்லாண்டு காலமாகத் தொல்லைப்பட்டான்.

இறைவனே தன்னை விசுவசிக்கும் தம் மக்களுக்கு விடுதலை அளிக்க ஆயத்தமானுர். மோயீசனைத் தெரிந்தெடுத்து அவர் வழியாக அவர்களை மீட்பதற்கு இறைவன் ஆயத்தப்படுத்தினுர். மோயீசன் அவர்களை மீட்டெடுக்க நாற்பது ஆண்டுகள் ஆயின. அவர்கள் உணவில்லாது பசியால் வாடியபோது வானத்தில் இருந்து மன்னவை உணவாகப் பொழிந்தார். தண்ணீர் இல்லாது தாகத்தினுல் தவித்தபோது பாறையில் இருந்து நீர்பெருகச் செய்தார். கொள்ளிவால் பாம்பினுல் தீண்டப்பட்டபோது வெண்ணிறசர்ப்பத்தை உயர்த்தி குணமருளினுர். இரவின் இருளில் தத்தளித்தபோது நெருப்புத் தூணுகவும் பகலில் மேகத்தூணுகவும் நின்றும் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். எகிப்தில் இருந்து விடுபட்டு கானுன் தேசத்துப் பயணமாகியபோது ஆற்றைக் கடக்க முடியாது திகைத்த பொழுது கடலை இரண்டாகப் பிரித்து நடைபாதையாக்கினுர். தலைச்சன் பிள்ளைகளை வெட்டும்படி எகிப்து முழுவதும் கட்டளை பிறந்தபோது செம்மறியின் இரத்தத்தின் மூலம் இஸ்ராயேல் மக்கள் பிரித்தெடுக்கப்பட்டனர். இவ்வாறு பழைய ஏற்பாட்டின் வரலாற்றில் விடுதலை வீரனுக, கதாநாயகனுக மோயீசன் தெரிந்தெடுக்கப்பட்டார்.

புதிய வரலாற்றிலோ மக்களின் நோய், துன்பம், மரணம் போன்றவற்றில் இருந்து அனைவரையும் மீட்டெடுக்கவும் ஒரு விடுதலை வீரன், ஒரு கதாநாயகன் தோன்றினுர் என்ருல் அவரே மீட்பர் கிறிஸ்து ஆவர். கிட்டத்தட்ட நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் தம் விடுதலையை நோக்கி ஒரு வீரனை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அந்த வீரன் ஒரு அரசகுலத்தில் பிறப்பார் எனவும் எதிர்பார்த்தனர். ஆனுல் மீட்பர் கிறிஸ்துவோ எமது விடுதலைப் போராட்டம் எவ்வண்ணம் இருக்க வேண்டுமென்பதை எடுத்துக் காட்ட ஏழ்மை, தாழ்மை, ஏக்கம், கலக்கம், பசி, தாகம் அடங்கிய ஒரு சூழலில் உருவெடுத்து இறுதியாக பாடுகள் மரணம் உயிர்ப்பு வழியாகவே எம்மை மீட்டார். பழைய பாஸ்காவுக்கும் புதிய பாஸ்காவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை பழைய வரலாற்றிலும் கிறிஸ்துவின் வாழ்வில் இருந்தும் உணர்ந்து கொள்ளலாம். அங்கே மீட்பின் தலைவனுக மோயீசனும் இங்கே கிறிஸ்துவும் தெரிகின்றனர். துன்பத்தின் வழியாகவே இஸ்ராயேல் மக்கள் மீட்கப்பட்டனர்.

எழுதியவர் J. இராக்கினிதேவி
உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறை திறந்தது காரிருள் மறைந்தது



நம் மண்ணின் நாளாந்த நிகழ்வுகள் எமது எதிர்கால நம்பிக்கைகளைப் பொய்யாக்கி விடுமோ என்ற அச்சம். கடந்த கால கசப்பான அனுபவங்கள் எம் மனத்திரையில் இன்னமும் நிழலாடுகின்றன. நடந்து வந்த, கடந்து வந்த பாதைகள் என்றுமே மறக்கப்பட முடியாதவை. துன்பங்கள் தொடர் கதையாக மாறித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந் நிலையில் இயேசுவின் பாடுகள் - மரணம் - உயிர்ப்பு எமக்குத் தரும் செய்தி எமக்கு நம்பிக்கை ஊட்டுகின்றது. வாழ்க்கையை எப்படியாவது வாழ்ந்துவிட்டுப் போவோம் என்ற மனநிலையில் இருந்து விடுபட்டு, துன்பங்களூடாக விடுதலையைப் பெறவேண்டும் என்ற உயரிய உண்மையை உணர்த்துகிறது.

நம் தமிழ் மக்களின் வாழ்வில் இக்காலம் என்றுமில்லாத துன்பங்களின் காலம். சல்லறை என்னும் சொல் ஒரு பழக்கப்பட்ட வார்த்தையாகி விட்டது. சாவு - கல்லறை - காணுமற் போதல் என்பன இன்று எம்மை அடிக்கடி விழிக்கச் செய்கின்றன. மரணச் செய்தி கேட்காத நாளே இல்லை. மற்றவரின் மரணம், அம்மரணத்தினுல் குடும்பம் அனுபவிக்கும் துன்பம் இவையெல்லாம் எம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. ஏன் எமது மரணத்தைப் பற்றிய நினைவும் எமக்கு ஒருவித அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றது.

நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு ஏதேனும் பொருள் உண்டா? இத்துன்பங்கள் மூலம் எமக்கு விடுதலை உண்டா? நாம் படும் வேதனை வெறும் அர்த்தம் இழந்த ஒன்ரு? இவைபோன்ற வினைக்கள் எம் மனத்திரையில் எழுந்து மறைகின்றன உண்மை தான். எம் துன்பங்களும், மரண இழப்புக்களும் இயேசுவின் பாடுகள் - மரணத்திலே உண்மைப் பொருளை, நம்பிக்கையை, அர்த்தத்தைப் பெறுகின்றன. ஏனெனில் இயேசு பாடுகள் பட்டு இறந்ததோடு அவருடைய கதை முடியவில்லை. அவர் உயிர்த்தெழுந்தார். துன்பத்தையும், மரணத்தையும் வெற்றி கொண்டார்.

இயேசு உயிர்த்திருக்காவிட்டால் இன்று கிறிஸ்தவம் இருந்திருக்க முடியாது. இயேசு இறைமகனுக இருக்க முடியாது. அவரது உயிர்ப்பிலே தான் முழுமையான இறைத் தன்மை வெளிக்கொணரப் படுகின்றது. உலக வரலாற்றில் பலர் இயேசுவைப் போல் உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தனர் மக்களுக்காக இறந்தனர். ஆனுல் அவர்கள் உயிர்த்தெழவில்லை. இயேசுவின் உயிர்ப்புத்தான் எமது விசுவாசத்தின் அத்திவாரமாகவும் எமது துன்பங்களின் நம்பிக்கையுமாக இருக்கின்றது. எம் கஷ்ட துன்பங்கள் எதுவும்வீண் போகவில்லை. அவற்றின் பெறுமதி யேசுவின் உயிர்ப்பில் நிலை நிறுத்தப்படுகிறது. இயேசுவின் பாடுகளை நாமும்தான் அனுபவித்தோம். அவருடைய மரணத்தை நாமும்தான் ஏற்றுக்கொள்கின்ருேம். இந் நிலையில் நாமும் அவரைப் போல் உயிர்த்தெழுவோம். விடுதலை நிறைந்த கடவுளின் அரசில் உரிமை மக்களாக எக்காலத்திலும் சாகாமல் வாழ்வோம்.

எனவே நாம் இனி கல்லறையைக் கண்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதுவே எமது விடுதலையை ஞாபகப்படுத்தும் சின்னமாக அமைய வேண்டும். சிலுவைகள் பல வடிவங்களில் எம்மை வந்தடைகின்றன. பிறரின் தவருன தீர்ப்புக்கள் - கடுஞ் சொற்கள் - பாவத்திற்கு இட்டுச்செல்லும் தீமைகள் - சோதனைகள் - வருத்த துன்பங்கள் - பாதுகாப்பின்மை - நெருக்கமானவர்களின் பிரிவுத் துயர் - வறுமை - உறவில் எற்படும் விரிசல்கள் - அன்பு செய்யப்படாமல் உள்ள துர்ப்பாக்கிய நிலை - சமூகத்தின் தவருன மரபுகள் இவையெல்லாம் எம்மை அச்சுறுத்தும் சிலுவைகள்தான்.

இச் சிலுவைகள் பலவடிவங்களில் வந்து எம்மைத் துன்புறுத்துகின்றன. முள்முடியாக இவை வந்து எம் தலையை கிறிப்பிழக்கலாம். சாட்டையடியாக வந்து எம்மை வருத்தலாம். ஆணிகளாக வந்து எம்மைத் துளைக்கலாம். ஆடை உரியப்படும் அவமான நிலைக்கும் நாம் தள்ளப்படலாம். எல்லாவற்றிற்கும் முடிவாக நாம் இறக்கவும் நேரிடலாம். இவை ஒன்றும் ஆச்சரியமான தொன்றல்ல. ஆனுல் இத்துன்பக் கலத்தை - நாம் விரும்பாத துன்பங்களை நாம் ஏற்றுக் கொள்கின்ருேமா? அல்லது இவற்றிலிருந்து தப்பி ஓடி ஒளித்துக் கொள்கிருேமா?

இயேசு தன் விருப்பத்தை நாடவில்லை. தன் தந்தையின் விருப்பத்திற்கு தன்னை முற்றாகக் கையளித்து விட்டார். நாமும் எம்மையே இறைவனின் சித்தத்திற்குக் கையளிக்க வேண்டும். இயேசுவின் பாடுகளில் எம் வாழ்வையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இயேசுவின் உயிர்ப்பு எம் வாழ்வில் நம்பிக்கையின் நிகழ்ச்சியாக என்றுமே நிலைநிற்கிறது. நாம் இனி மறுமுறை சாக மாட்டோம். ஒரு முறை மட்டுமே சாவோம். பின்னர் மாட்சிமையின் அரசில் நுழைய உயிர்பெறுவோம். இயேசுவின் வாழ்வு அவரின் பற்றற்ற நிலைமையையும், தந்தையின் மேல் அவர்கொண்ட விசுவாசத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. நம்பிக்கையோடு தான் அவர் வாழ்ந்தார். தந்தை தன்னைக் கைவிடமாட்டார் என்பதில் அவருக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. அதனுல்தான் அவர் எந்தத் துன்பத்தையும் நம்பிக்கையோடு ஏற்க முடிந்தது. தான் பாடுபட்டு இறந்து புதைக்கப்பட்டுவிட்ட பின்னர் மீண்டும் மூன்று நாட்களில் இறைவனின் வல்லமையால் உயிர்பெறுவேன் என்று விசுவசித்தார். ஆம் விசுவாசமின்றேல் இயேசு எதுவும் மக்களுக்காக செய்திருக்கமுடியாது. ஏன் கல்வாரி நாடகமே அரங்கேறியிருக்க முடியாது.

இயேசு விசுவாசத்துடன், பாடுகளை ஏற்று, மரணத்தைத் தழுவி உயிர்த்தார் என்ருல் எம் துன்ப நிலையிலும் நாம் நம்பிக்கை இழக்கக் கூடாது. நம்பிக்கையுடன் சவால்களைச் சந்திக்கப் புறப்பட வேண்டும். அப்படி நம்பிக்கை எம்மில் ஏற்படுமாயின் எமது வாழ்வு விசுவாச வாழ்வாக, இறைவனுக்கு உகந்ததொரு மேலான வாழ்வாக, அமையும், எனவே இயேசுவின் வெற்றியில் நாமும் பங்கு கொள்ள வேண்டுமாயின் அவருடைய வழிகளை, அடிச்சுவடுகளைத் தேடிக் கண்டடைய வேண்டும்.

"கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள். அங்கேதான்; கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிருர். இவ்வுலகில் உள்ளவற்றின்மீது மனத்தைச் செலுத்தாமல் மேலுலகிலுள்ளவற்றின்மீதே மனதைச் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் இறந்துவிட்டீர்கள். உங்கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது நம்முடைய உயிராகிய கிறிஸ்து தோன்றும் பொழுது, நீங்களும் அவரோடு மாட்சிமையில் தோன்றுவீர்கள்" (கொலோ. 3: 1-4)

ஆம்! கல்லறை திறந்தது. காரிருள் மறைந்தது. எம் துன்பங்களுக்கெல்லாம் பயன் கிடைத்துவிட்டது கல்வாரி மரணமும், கண்ணீரும், துயரமும் இனி எம் வாழ்வில் இல்லை. வாழ்வுக்குச் சாவில்லை, சாவுக்கு வாழ்வில்லை. மீட்பர் மரணத்தை வென்றுவிட்டார். வாழ்க்கை பிறந்தது. மரணம் மறைந்தது. இனிக்கிறிஸ்துவிலே புதுவாழ்வு வாழ்வோம்.

கடந்த கால இருண்ட வாழ்வை மாற்றிக்கொள்வோம். கவலை, துன்பம், கலக்கம் யாவையும் உதறித் தள்ளுவோம். உயிர்த்த இயேசு அவரை நெஞ்சில் ஏற்றுக் கொள்வோம். இயேசுவின் அமைதியை, சமாதானத்தைப் பகிர்ந்துகொள்வோம். எழுந்து நடப்போம். எம் விடியல் அண்மித்து விட்டது அதோ தெரிகிறது அதிகாலை.

— சகோ. பி. சி. நேசரத்தினம்

## நமக்காக பலியான இயேசு

பாரெங்கும் பலன் கொடுக்க
பாவியர் நாம் மீட்புப் பெற
பாரமான சிலுவைதனை
தன் தோள் மீது சுமந்து சென்ருர்

சுமையின் பாரத்தால்
சோர்ந்து மடிந்து
சுமைதாங்க முடியாமல்
பாதையிலே பாதங்கள் தடுமாற
பரமன் பலவீனமாகத் தரையிலே விழுந்தார்.

மாசற்ற மறைபொருளின்
மாண்புள்ள வதனமதில்
வடிந்தது செந்நீர் வியர்வை
குவிந்தது மேனியால் குருதித் துளிகள்
கூச்சல் போட்ட கொடியவர் கூட்டம்
ஆத்திரம் கொண்டு சாட்டை அடியினுல்
ஆடைதனைக் களைந்து சீட்டும் போட்டனரே

உலகிற்கு ஒளியாக
உண்மை பேசவந்த
உத்தமன் யேசு
உயரமான சிலுவையிலே
உறங்கிடவே உயர்த்தினரே

சிந்தை கலங்கிடவே
சிதைபட்டு விழிகள் திறந்த
விந்தை தெய்வம்
பழிகள் சுமந்த நிந்தை தெய்வம்.

தாகமாய் இருக்கிறதென்று
தடுமாறிக் குரல் கொடுத்தார்
வாழ்வளிக்க வந்த வல்லப தேவன்
பாவத்தில் நின்றெம்மை மீட்டிடவே
சிறகொடிந்த பறவை போல்
சிலுவையிலே பலியானுர்.



நிகடோர் சித்திரா
உரும்பிராய் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிர்ந்து வாழும் பண்பு மனிதனின் ஓர் சிறந்த கொடை

ஆதியில் இறைவன் பூமியைப் படைத்தார். படைக்த பூமியில் படைப்புக்கள் அனைத்தையும் மிக அழகாகப் படைத்தார். படைப்பின் சிகரமாய், படைப்பின்மாட்சிமையாய் மனிதனை தனது சாயலாகவும் மிகவும் மேன்மையுள்ளவனுகவும் படைத்தார் என்ருல் மிகையாகாது.

இறைவன் தெய்வீக சாயலாக மனிதனைப் படைத்தார் என்பதைப் பார்க்கும்போது இறைவன் தன்முழு ஆற்றலையும் மனிதனேடு பகிர்ந்து அவனை ஓர் உன்னத படைப்பின் சிகரமாய் உருவகித்தார். படைப்பின் சிறந்த அறிவான சுயாதீனத்தை அவனுக்கு அளித்தார். இவ்வாறு தன்னுல் படைக்கப்பட்ட மனிதன் தனியே இருப்பது கண்டு அவன் மீது இரங்கி அவனுசகு சமதுணையை உருவாக்கிக் கொடுத்து ஓர் அன்புக்கட்டளையும் கொடுத்து. அவர்களை அருள்நிலையில் வாழவழி வகுத்தார். அவர்கள் ஆங்காரம் கொண்டு ஆணவம் தலைக்கேறி தானும் கடவுளைப் போல் ஆகிவிடலாம் என்ற எண்ணத்தில் இறைவனின் அன்புக்கட்டளையை மீறினர். இறைவனுக்கு கீழ்ப்படியாத மனிதன் ஆசையினுல் அலைக் கழிக்கப்பட்டான. மீண்டும் தவறிய மனிதனை தம்மோடு அணைத்து தழுவிக்கொள்ள பல தடவைகளில் பலவேறு தலைவர்கள் மூலம் உடன்படிக்கை செய்தார். அவர்கள் திருந்தவில்லை

ஆனல் காலம் நிறைவுற்றபோது இறைவனே மண்ணுலகில் மனுவரு எடுத்து மனிதனுக அவதரித்து பாவக்காரியங்கள் அனைத்தும் தவிர்த்து ஏனையவற்றில் மனிதனேடு தன் ஆற்றல்களையும், சக்திகளையும் பகிர்ந்து கொண்டார். கடவுள் தன் ஆற்றல்களையும், பெருமைகளையும் புகழையும், உயர்ந்தவர்களோடும், தலைவர்களோடும் பகிர்ந்துகொள்ள முற்படவில்லை. மாருக ஆயக்காரர்களோடும், பாவிகளோடும், ஏழைகளோடும், வியாதிக்காரரோடும் பகிர்ந்து வாழ்ந்தார். இறைவன் தன் அருக்கொடைகளால் மனிதர்களிடையே நிலவிவந்த குறைகளைப்போக்கி, நிறைவுள்ளவர்களாக்கினுர். தலைவர்கள் பழைய சட்டங்களையும், சடங்குகளையும் போதித்து வந்தனர். ஆனல் ஆற்றல்களைப் பகிர்ந்து வாழ மறுத்தனர். ஆனல் இறைவன்பழையசட்டங்களைத் திருத்தி தன் ஆற்றல்களையும் திறமைகளையும் எல்லா மனிதர்களோடும் பகிர்ந்து கொண்டார். எந்தநேரத்தில் மனிதனுக்கு எது தேவைப்பட்டதோ அந்த நேரமெல்லாம் குறைவின்றி நிறைவாக எவரெவருக்கு வேண்டிய எதுவோ அது எல்லாவற்றையும் பகிர்ந்தளித்தார். கிறிஸ்து தன்னிடம் தேடிவந்த எந்த மனிதனையும் குறைவாக விடவில்லை நிறைவாகவே அனுப்பிவைத்தார் கிறிஸ்து தன் ஆற்றல்களையும் சக்திகளையும் வல்லமையையும் மனிதனேடு

இதன் காரணம். முதலில் மனிதனேடு அன்பு நிலவிவருமானுல் பகிர்ந்து வாழும் பண்பு தானுகவே தோன்ற வழியாகும் எனவே மனிதனை மனிதன் மதித்து வாழ்ந்து தன் ஆற்றல்களையும் சக்திகளையும் தன்னிடமுள்ள யாவற்றையும் பகிர்ந்து வாழ முடியும்.

நாம் எல்லோரும் அப்படி பகிர்ந்து வாழ்ந்து வருவோமானுல் இறைவன் கூறிய படியே ஏழைகள் சிறுவர்கள்



(ப)கிர்ந்து கொண்டது மாத்திரமல்ல, எல்லா மக்களையும் மீட்பதற்காக தன் உயிரையும கூட மக்களுக்காய் பகிர்ந்தளித்தார். கிறிஸ்துவின் பகிர்ந்து வாழுதலின் உச்சப்பண்பின் அடையாளமாக கிறிஸ்து உலகில் விளங்கினுர்.

எனவே கிறிஸ்துவின் ஒளியில் வாழும் கிறிஸதவர்களாகிய நாம் ஏன் பகிர்ந்து வாழக் கூடாது. இலவசமாய் பெற்ற கொடைகளை பகிர்ந்தளிக்க மறுப்பது ஏன். மற்றவன் தன்னிலும் பார்க்க உயர்ந்து விடுவான் என்ற பொருமையே ஒவ்வொருவருக்கும் நீங்கள் செய்யும போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்றும் கிறிஸ்துவின் பொன்மொழிக்கிணங்க என் தந்தையின் ஆசி பெற்றவர்களே உங்களுக்கென்று ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் பேரின்பத்தில் இன்புற்று வாழ வாருங்கள் என்று நம் ஒவ்வொருவருக்கும் கூறும் வார்த்தையை கேட்பதற்கு நாம் மற்றவர்களோடு பகிர்ந்துவாழ முற்படுவோமா? ஆகவே உலகில் ஆழமான அன்பும் நீடிய சமாதானமும் நிலவும் என்பதிற் ஐயமில்லை.

செல்வி திரேசா ஞானமுத்து
குளமன்கால்.

## முடிகொண்ட முதல்வன்

மூதாதை சூசையின் மூத்த மைந்தன்
முது பெரும் தந்தை தாவீதின் குலத்தில்
மூவுலகை மீட்க மனுவுரு எடுத்து
முடி மகனுய் எம்மிடை அவதரித்தார்

மும்முறை பசாசின் சோதனை வென்று
மூவுலகாளும் மனுமகனுய்
முடிவுறும் உலகின் பாவிகள் எம்மை
மூழ்க விடாது புத்துயிர் அளித்தார்

மூடர்கள் யூதரின் கொடுமைகள் ஏற்றே
முத்தான உன் தேகம் சத்தின்றி வாடியதே
மூன்ருணியில் உன்னுயிரை மூழ்கடிக்க
மூர்க்கத் தனத்துடன் நடந்தனரே.

முத்தான மூன்று நாளினிலே
முடியுடை மன்னனுய் கொடியேந்தி
மூதாதையர் செய் குற்றமெல்லாம்
முற்ருக நீக்கி முடி கொண்டாய்

செல்வி. ரமணி அந்தோனிப்பிள்ளை
மாரீசன் கூடல்,
இளவாலை.

## கிறிஸ்துவோடு உயிர்ப்போம்

''ஒரு கோதுமை மணி நிலத்தில் விழுந்து மடிந்தாலன்றி மிகுந்த பலனைக் கொடுக்க முடியாது.''

இத்தத்துவத்திற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு கிறிஸ்துவாகும். மடிவதற்கு ஆயத்தமாக அவர் முப்பது ஆண்டுகள் மறைந்து வாழ்ந்தார் மூன்ருண்டு சேவைக்கு முப்பது ஆண்டுகள் ஆயத்தம்.

தனது மூன்ருண்டு சேவையிலே ''அன்பு'' என்னும் மூன்றெழுத்துக்கு இலக்கணமானுர், குருடருக்கும் பார்வை கொடுத்தார், செவிடர் கேட்கச் செய்தார், குற்றம் செய்தவர்களை மன்னித்தார். இதனுலேயே அவர் மனிதருள் மாணிக்கக் கோயிலானுர். பிறப்பிலிருந்து உயிர்ப்புவரை அவர் வாழ்வு நித்தமும் மடிந்த வாழ்வாகவே இருந்தது. தான் படைத்த உலகிலேயே தனக்கு உரிமை இல்லை என்பதை உணர்த்தினுர். யாருடைய மாட்டுத் தொழுவத்திலேயோ பிறந்தார், எவருடைய கழுதையிலோ ஜெருசலேம் சென்ருர். இன்னெருவருக்கு ஆயத்தம் செய்யப்பட்ட கல்லறையிலே அடக்கபட்டார். வாழும் பொழுது தலைசாய்க்க இடமின்றி இருந்தவர் இறந்த பின் உடலை அடக்கம்பண்ண இடமின்றி இருந்ததில் வியப்பெதுவும் இல்லை. இக்கோதுமை மணியை நாம் என்னென்று தான் சொல்லுவது?

மரித்தவரின் உடலைக் கல்லறையில் அடக்கம் செய்தனர், ஆனுல், அவரது உடல் கல்லறையில் அடங்கவில்லை, மனுக்குலத்தின் மன்னனுன அவரின் உயிரை, வாழ்வை, இலட்சியங்களை, அக்கல்லறையால் அடக்க முடியவில்லை. கிறிஸ்துவின் மரணத்தின் பின் மூடிய கல்லறையுடன் சீடர்களின் மனங்களும் மூடப்பட்டன். அதோ மரணம் தமக்கும் வருமென எண்ணி அறைகளில் அடங்கிக் கிடந்தனர். ஏன் ஜெருசலேமிலிருந்து எம்மாவுஸ் நகருக்கு ஓடினர். இவரை நம்பினேம் ஆனுல், இவர் எங்கள் காலை வாரி விட்டாரே. இனி எப்படி வாழ்வது? என்ன பதில் சொல்வது? என்று மறைந்து வாழ்ந்தனர். ஆனல் அவர் அவர்களை அவ்வாறு பரிதவிக்க விடவில்லை. சீடரின் உள்ளங்களை திறக்கப் புதுவாழ்வு பெற்று, புத்துயிர் பெறறு, மரணத்தை வென்று மாவீரனுக உயிர்த்து விட்டார். மனிதனுக்கு வாழ்வளிக்க மனிதக்கோலம் பூண்ட மன்னன் பாவத்தை ஜெயித்து விட்டார்!

இன்று உயிர்ப்பு விழாவைக் கொண்டாடும் எம் நிலை என்ன? சீடர்கள் போல் யேசுவின் வாக்குகளை மறந்து மூடிய அறைகளுக்குள் வாழ்கிருேமா? அல்லது அவர் எம்மை கைவிட்டு விட்டார் என்று ஒலமிடுகிருேமா? உங்கள் விசுவாசம் எங்கே என்று அவர் கேட்கிருர், பதில்?

அநீதியை அழித்து நீதியை நிலை நாட்டியவர், பொய்மையை வென்று உண்மையில் உயிர்த்தவர் எம்மிடையே வாழ்கிருர். அன்புக்காக வாழ்பவர் என்றுமே சாவதில்லை, எம் நிலை தளர்ந்த இதயங்களில் அவர் குடிகொள்கிருர். உயிர்ப்பின் பரிசாக அவர் அளித்த சமாதானம் இந்த உலகமே எமக்கு வழங்க முடியாததாகும் இது ஒரு வெறும் சொல்லல்ல. எம் அடி உள்ளங்களில் எம் மனத்தில் வளர வேண்டியது கிறிஸ்து வழங்கிய உண்மையை. மன்னிப்பை. நீதியை, நாமும் மற்றவருக்குக் கொடுத்து வாழ்வோம். தோல்வியைக்கண்டு ஒடுங்கிவிடாது உயிர்த்த கிறிஸ்துவுக்கு சாட்சி பகர்வோம். எம்மிடையே உள்ள பிளவுகளை அழித்து, சாதி மத பேதங்களின்றி மீட்புப் பெற்று, சுயநலம், தாழ்வு மனப்பான்மை தீய பழக்கங்களுக்கு சாவு மணியடித்து மீட்படைவோம். புது உயிர்பெறுவோம். அப்பொழுது தான் உயிர்ப்பு விழா பொருளுள்ளதாக அமையும், இதுவே உயிர்த்த கிறிஸ்து எமக்கு அளிக்கும்மீட்புச்செய்தியாகும்.

எறிக் ஜீவராஜ்
கொட்டாஞ்சேனை
கொழும்பு


## சிலுவை

இருமரத்துண்டு இணைந்திட்ட - சிலுவையிது;
இரட்சாபிரான் தொங்கிய சிலுவையிது.
இருளை அகற்றிடும் - சிலுவையிது;
இரட்சிப்பு தந்திடும் சிலுவையிது.
பசிப்பவர்க் குணவளிக்கும் -சிலுவையிது.
பசாசை வென்றிடும் சிலுவையிது.
வறுமையை போக்கிடும் - சிலுவையிது;
வாழவழிகாட்டிடும் சிலுவையிது.
அன்பைப் பொழிந்திடும் - சிலுவையிது;
அநீதியை கண்டுபிடிக்கும் சிலுவையிது.
பகைவரைமன்னிக்கும் சிலுவையிது
பாசத்தை ஊட்டிடும் சிலுவையிது.
இரத்தம் சிந்திய சிலுவையிது;
இரட்சணிய யாத்திரையின் சிலுவையிது

எஸ். செல்வக்குரு, தாழையடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா மறைபொருளின் உட்பொருள்



மீட்பு வரலாறு ஒரு இறந்த கால நற்செய்தி மாத்திரமல்ல, அது இடப காலம் கடந்து மீட்கும் இற்றைய நிகழ்வாகவும் நிகழ்ந்து வருகின்றது. ஆதியில் திருமகனும் இறைவார்த்தையில் மறைபொருளாயிருந்த இம்மீட்புத் திட்டம் இன்றும் என்றும் எங்கும் இவ்வுலகில் நிறைவேறி வருகின்றது.

"ஆகுக" என்று ஆதியில் யாவையும் படைத்த தந்தையின் வார்த்தை "உமது வார்த்தையின்படியே ஆகுக" என்று மரியாயில் எதிரொலித்தது, "புனர் ஆகுக" என்று மீட்பராம் கிறிஸ்துவில் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது. மீட்பென்பது படைப்பின் தொடர் கதையாய் கிறிஸ்துவில் தொடர்ந்து கால இறுதியில் நிறைவெய்தும் உலக இறுதிவரை நம்மோடு இருப்பதாக இயேசு அளித்த வாக்கு அவரது வெறும் பிரசன்னத்தை மாத்திரமல்ல, ஆனால் குறிப்பாக அவர் எம்மத்தியில் புனராக்கும் அவரது பிரசன்னத்தையே; அதாவது அவராற்றி வரும் மீட்புச்செயலையே குறிக்கின்றது. அவர் தமது மீட்புப் பணியை தூயதம ஆவி வழியாய் (குறிப்பாக திருச்சபையிலும், அருளடையாளங்களிலும்) எல்லாக்காலங்களிலும் இடங்களிலும் நிறைவேற்றி வருகின்றார்.

எல்லாங்கடந்து அப்பால்நிற்கும் (Transcendent) கடவுள் பாவத்தால் தீண்டப்பட்டு மூழ்கிப் போகும் படைப்பைத் தாமே தழுவித் தாங்கிக் கரைசேர்க்கும் பேரிரக்கப் பரிவின் பின் படலத்தை மீட்பின் வரலாற்றில் காண்கிறோம். இக் "கிறிஸ்து நிகழ்வில்" (பாவத்தின் விளைவால் சாவு துன்பமெல்லாம் மீட்பின் கருவியாக மாறுகின்றன, மனிதனும் மீட்புத்திட்டத்தில் பங்கேற்று கிறிஸ்துவில் ஓர் புதிய படைப்பாகின்றான். பழைய ஏற்பாட்டில் முன் குறிகளால் நிழலாடிய கிறிஸ்து நிகழ்வு புதிய ஏற்பாட்டில் நிசமாகி அவரது மறையுடலாகிய நம்மிலும் நனவாகிறது. புதிய ஆதாம் (=மனிதன்) கிறிஸ்து மீட்புத் திட்டத்தின் முதற்கட்டமாகிய பழைய ஏற்பாட்டைத் தமதாக்கி, நிறைவேற்றி அதைத் தம்மில் முடிவுறச் செய்து புதிய ஏற்பாட்டைத் தம்மிலேயே ஆரம்பித்தார். அவர் எமது மீட்பரும் மீட்புமானார்.

இஸ்ராயேலரின் விடுதலையை ஒட்டி நிகழ்ந்தவையெல்லாம் கிறிஸ்துவில் நிறைவு காண்கிறது. தலைச்சன் பிள்ளைகளைக் காப்பாற்றிய பாஸ்காச் செம்மறியின் இரத்தம், புளியாத அப்பம், மன்னா, வெண்கலச் சர்ப்பம் போன்றவையெல்லாம் "கிறிஸ்து நிகழ்வில்" மறுரூபங்கொண்டு மேம்படுகின்றன.

நம் ஆதிப்பெற்றோர் இறைவார்த்தையைப் புறக்கணித்து அலகையை நம்பி, விலக்கப்பட்டதை உண்டுமடிந்தனர். இஸ்ராயேலரும் பாலைவனத்தில் சுவை உணவிற்காக இறைவனுக்கெதிராக முணுமுணுத்தனர். இறை பராமரிப்பில் நம்பிக்கை வையாது அவரைச் சோதித்தனர். பொற்கன்றைத் தங்கள் தெய்வமாக வழிபட்டனர். அதனால் 40 வருடங்களாக அவர்களை வனந்திரத்தில் இறைவன் அலைந்துலையவிட்டார். இறை மக்கள் அனுபவித்த எல்லாவற்றையும் இயேசு தமதாக்கி மனுக்குலத்திற்காக வெற்றிசூட்ட விழைந்தார். அவரும் 40 நாட்கள் வனந்தரத்தில் தவம்புரிகிறார். தன்னைச் சோதிக்க வந்த அலகையை ஜெயித்து ஓட்டுகிறார் உணவைவிட உயிர் தரும் இறைவார்த்தையைத் தேடவேண்டும். இறைவனைச் சோதிக்கலாகாது ஒரே கடவுளாகிய அவரையே வழிபடவேண்டும் என்று தமது போதனையைச் சாதனையால் நமக்குப் புகட்டி, நமக்காக அலகையையும் உலகையும் வெல்லுகின்றார். இஸ்ராயேல் மக்கள் இறைவனுடன் உடன்படிக்கை செய்யுமுன் செங்கடலைக் கடந்து விடுதலை எய்தியது போல், அவர்களது பிள்ளைகளும் புனித பூமியைச் சுதந்தரிக்குமுன் யோர்தான் நதியைக் கடந்து யோசுவாவின் தலைமையில் இறைவனுடன் செய்த உடன்படிக்கையைப் புதுப்பித்தனர். இவ்விரு நீர் கடத்தலும் புதிய ஏற்பாட்டின் திருமுழுக்கின் முன்னறிகுறியாகும். இயேசுவும் தமது புதிய உடன்படிக்கையின் மீட்புக் கட்டத்தைத் தொடங்குமுன் யோர்தானில் திருமுழுக்குப் பெற்று அச்சடங்கை திருநிலைப்படுத்தி, புதிய ஏற்பாட்டு இறைமக்களையாக்கும் மீட்புக்கருவியாக்குகின்றார். இவ்வருளடையாளத்தால நாம்கிறிஸ்துவில் இறந்து அடக்கம் செய்யப்பட்டு உயிர்த்தெழுகின்றோம்.
(உரோம. 6:3,4;
கொலோ 2:12)

இஸ்ராயேல்மக்கள் பாஸ்கா வழிபாட்டின் வழியாக இறைவன் தந்த விடுதலையை நினைந்து, அவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையையும் புதுப்பித்தனர். இவ்வாறு அம்மீட்பின் நிகழ்வில் பின்வந்த தலைமுறைகளும் பங்கேற்று அவ்வுடன்படிக்கையைத் தமதாக்கி இறைமக்களானார்கள். இயேசு இத்திருச்சடங்கைத் தமதாக்கி, அதனைத் தம்மில் முற்றாய் நிறைவேற்றி அதனைப் புதிய ஏற்பாட்டினதும் மைய வழிபாடாக்கினார்.

இவ்வழிபாட்டில் பங்குபற்றுமாறு அன்னையாம் திருச்சபை எம்மையும் வருடாந்தம் அழைக்கின்றது. கிறிஸ்துவின் மீட்புச் செயலில் அவரது மறையுடலாகிய நாமும் ஈடுபடத் தூண்டுகின்றது. தவக்காலத்தில் இயேசுவின் 40 நாள் வனந்திர அனுபவத்தில் நாமும் பங்குபற்றி நமது ஒறுத்தல்களால் அவருடன் அறையுண்டு, இறந்து உயிர்த்தெழப் பயில்கின்றோம் இவ்வாறு அவரது சாயலாகின்றோம். நம் தலையாம் கிறிஸ்துவின் பாடுகள் நமதாகி மீட்பளிப்பதுபோல் அவரது மறையுடலாகிய நமது தபசு துன்பங்களெல்லாம் அவரதாகி, மீட்புத் திட்டம் நம்மிலும் நிறைவேறுகின்றது (கொலோ 1:2?) இவ்வாறு கிறிஸ்துவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் பங்காளிகளாகின்றோம் இதுவே மீட்பு வரலாறு. இதுவே பாஸ்கா மறைபொருள். ஏனெனில் கிறிஸ்துவில் இறந்துயிர்த்தலே பாஸ்கா மறைபொருளின் மையக் கருப்பொருள். கிறிஸ்து இறந்துயிர்த்தலை ஒரே செயலாக புனித சின்னப்பர் கருதுகின்றார். புனித அருளப்பர் கிறிஸ்துவின் பாடுகளை வெற்றிக்கு வழிகோலும் வீரச் செயலாக எடுத்துக்காட்டுகிறார். ஏனெனில் அவரது இறப்பின்றி உயிர்ப்பு நிகழ்ந்திராது.

கிறிஸ்து வரும்வரை அவரது மரணத்தையும் (1 கொரி 11:24–26) உயிர்த்தெழுதலையும் அறிக்கைபிட்டு இப்பாஸ்கா மறைபொருளை அனுதினமும் திருப்பலியில் புதுப்பித்து அனுபவிக்கின்றோம். இத்திருப்பலி கிறிஸ்துவ வாழ்வின் மையமும் ஊற்றுமாய்த் திகழ்கின்றது. அதில் கிறிஸ்துவுடன் பலியாகி அவரது உயிர்த்தெழுந்த உடலை உண்பதால் நமது உடலின் உயிர்த்தெழுதலுக்கும் ஆயத்தமாகின்றோம். ஆகையால் பாஸ்கா மறை உண்மையை ஆண்டாண்டு பெருவிழாவாகக் கொண்டாடுவது நாம் அனுதினமும் (குறிப்பபாக ஞாயிறன்று) ஒப்புக்கொடுக்கும் திருப்பலி விருந்தில் கருத்துடனும் பக்தியோடும் பங்குபற்றி கூடிய பலன் பெற உதவுமன்றோ.

அருட்திரு. அதிரியான யோசப்
அ.ம.தி

## உயிர்த்துவிடு!....,.

உலகினர் உய்யவே ஊனுடலானார் — எம்
உள்ளமதில் உறைந்திட்டார் உத்தமன்

இறைவன் பிறந்தார் இவ்வுலகினிலே
இன்பம் இத்நிலத்தில் இருந்திடவே,
கறைகளைக் களைந்திடவே, குறைகளைக் குறைத்திடவே
கத்தர் கருவினிலே அவதரித்தார்

பாவிகள் பாவம் போக்கி
பரமன் அண்டை அடைந்திடவே — அவர்
பாருலக மக்களுக்காக
பாடு பல பட்டாரே

உத்தமன் என்பதை உலகிற்கு — உயிர்ப்பினல்
உணரவைத்து உறுதிப்படுத்தினர் — ஆனல் நாம்
பாவம் என்ற படுகுழியிலே படுத்துறங்குகின்றோம்

உயிர்த்து விட்டார் உத்தமன்யேசு — ஓ...நீயும் பாவத்தை
உதறி எறிந்துவிட்டு — உன் பாவத்திலிருந்து
உயிர்த்துவிடு!.........

— அன்புக்குழந்தை
முருங்கன்

## அவர் உயிர்த்தெழுந்து விட்டார்

இது ஜெருசலேம் நகரத்துக் கதை. என்ன? உருவகக் கதையா? கற்பனைக் கதையா? இல்லை. கல்வாரியில் நமக்காக பாடுகள்பட்டு, இரத்தம் சிந்தி சிலுவையிலே மரணித்து மூன்றும் நாளில் உயிர்த்தெழுந்து உலகை இரட்சித்த இறைமகன் இயேசுவின் கதை இது.

ஜெருசலேம் நகரிலே ஒரு கல்லறை. அதைச்சுற்றி ஒரு கோயில். அதுதான் யேசுவின் கோயில். இக்கோயிலிலே பல்வேறு ஸ்தலங்கள் பல. பாரச் சிலுவை சுமத்திய இடம். இயேசுவின் திரு உடைகள் களையப்பட்ட இடம் அருகில் சிலுவையில் அறையப்பட்ட இடம். இயேசு சிலுவையில் தொங்கி உயிர் நீத்த இடம். இறைமகன் திருத்தாயாரின் மடியில் வளர்த்தப்பட்ட இடம். பரிமளத்தைலம் பூசப்பட்ட இடம். இறுதியாக கல்லறையினுள் வைக்கப்பட்ட இடமும் அதுவே. இவையாவும் ஒரு கே விளக்குள் அடங்கி விடுகின்றன. இந்தக் கல்லறைக் கோயில் நமக்குத் தரும் செய்தி என்ன தெரியுமா? அதுதான் தூதன் அளித்த செய்தி? "அவர் இங்கேயில்லை. தாம் கூறியபடி உயிர்த்து விட்டார்." (மத்: 28:6) ஆம் அவர் கல்லறையில் இல்லை. கல்லறையாலும் அவரை அடக்கிவைக்க முடியவில்லை. "அவர் உயிர்த்தெழுந்து விட்டார்," அவர் வாழ்கிறார். வாழ்ந்துகொண்டேயிருக்கிறார்.

"இந்த ஆலயத்தை இடித்துவிடுங்கள், மூன்றும் நாளில் கட்டியெழுப்புவேன்" என்று உரைத்தார் இறை மகன் கிறிஸ்து. அவர் கூறியதுபோல் நிகழாமலிருந்தால் எமது விசுவாசத்தின் நிலை என்ன? நாம் கிறிஸ்தவர்கள் என்று பறைசாற்றுவதால்தான் என்ன பயன். எம்மால் கிறிஸ்து யேசுவுக்குச் சான்று பகர முடியுமா? எனவேதான் எமது விசுவாசம் அழிந்து போகாதபடி மரித்தோரிடமிருந்து மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார். எனவே! அவரது கருத்துக்கள், சிந்தனைகள் புரட்சிகள மட்டும் உலகில் பரவவில்லை. "அவரே உலகில் பரவி விட்டார்" என கிறிஸ்தவம் எமக்குத்தரும் மாபெரும் செய்தி இதுதான். ஆகவே எமது விசுவாசம் நிலைபெற "அவர் உயிர்த்தெழுந்து விட்டார்"

கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே, உங்கள் விசுவாசமும் பொருளற்றதே.
(1 கொரி. 15:14)

சந்தியோகு பிரபா
முதலை குத்தி
உயிலங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவே, உன் வெற்றி எங்கே? உன் கொடுக்கு எங்கே?

சாவு என்றதும் மக்களுள் பலருக்கு அது ஒருவித திகிலையும், அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. பகைவரைப்போரில் வென்று வெற்றிவாகை சூடிய வீரரும் மரணம் என்றவுடன் ஒருவித பயமடைகின்றனர். காரணம் அவர்களின் பெயர் புகழ், சாதனைகள் அனைத்தும் அவர்களின் மரணத்துடன் முடிவு பெறுகின்றன. இவையனைத்தும் அவர்களோடு அவர்களின் சவக்குழியில புதைக்கப்படுகின்றன கல்லறையும் இடுகாடும் இதுவரையும் எவராலும் பிடிக்கப்படாத கோட்டைகள். சாவை வென்ற எந்த மனிதனைப்பற்றியும் நாம் கேட்டறியோம். மரணத்துடன் போராடி வெற்றி எய்தியவர், சாவின் மேல் தம் வலிமையை அத்தாட்சிப்படுத்தியவர் உலக மாந்தருள் எவருமே இருந்ததுமில்லை. இருக்கப்போவதுமில்லை. எனவே தான் மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதும், மனித உடல்'' எலாம'' அடிக்கத்தொடங்கிவிடுகிறது. இதயத்துடிப்பு விமானத்தின் இரைச்சலைவிட வேகமாகப் பரபரப்படைகிறது.

இருந்தும் உலகவரலாற்றில் கற்பனைக்காவியங்களிலும் கட்டுக்கதைகளிலுமல்ல- சாவுக்குத்துளியளவும் பயப்படாதவர், மரணத்துக்கு அடிமையாக மறுத்தவர் ஒருவர் இருந்தார். அவர் தான் இறைமகன் இயேசு அவரது வாழ்வு அடக்கத்துடன் முற்றுப்பெறவில்லை கிறிஸ்து தமது உயிர்ப்பால் சாவைச் சாகடித்தார். சாவின் சாவால் இறந்தவர் வெற்றித்திருமகனாக உயிர்த்து நின்றார். சாவே, உன் வெற்றி எங்கே? சாவே, உன் கொடுக்கு எங்கே? என வெற்றி முழக்கம் செய்தார் (1 கொரி. 15:55)

சாவின் மீது தமக்கு அதிகாரமும் வல்லமையும் உண்டெனக்காட்டவே கிறிஸ்து மரித்த மூன்றும் நாள் உயிர்த்தார். தமது உயிர்ப்பின் மூலம் சாவுக்கு அவர் ஓர் புதிய இலக்கணம் வகுத்தார். சாவு என்பது வாழ்க்கையின் முடிவு அன்று அது வாழ்வின் ஒரு பருவம் முற்றுப்பெற்று இன்னொரு பருவம் ஆரம்பிப்பது. மக்களுக்கு மறுவுலக வாழ்வு அளிக்க வந்த வள்ளல் கிறிஸ்து, சாவுக்குப்பின்னும்வாழ்வுண்டு என்ற தம் போதனையை மக்கள் நம்புமாறு செய்வதற்கும், சாவின் மேல் தமக்கு வலிமையுண்டு, மரணத்தின் மேல் வெற்றி கொள்ளத்தம்மால் முடியுமென்றும் ஐயப்பாட்டுக்கு இடமில்லாத வகையில் அத்தாட்சிப்படுத்தவே, அன்று. மரித்தோருக்கு உயிர் அளித்தும், தாமும் உயிர்த்தார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பை நாம் சரித்திரவாயிலாகவோ, நம் புத்திக்கூர்மையினாலோ அத்தாட்சிப்படுத்த முடியாது ஏனெனில் அது ஒரு மறைபொருள். புதுமைகளுள் சிறந்த புதுமை. அதை நாம் விசுவாசத்தின் மூலம் தான் ஏற்றுக் கொள்ளுகிறோம் இருந்தும், கிறிஸ்துவின் உயிர்ப்பு வரலாறு வரையறுக்கும் ஓர் உண்மை. இதை அண்மையில் நம் பரிசுத்த தந்தை 2 ம் அருள் சின்னப்பர் வலியுறுத்தியிருக்கின்றார். இயேசுவும் தமது உயிர்ப்பைக் குறித்துப் பல தடவைகளில் முன்னறிவித்தல் அளித்திருக்கிறார். ''மனுமகன் மனிதர்களிடம் கையளிக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொல்லுவார்கள். கொல்லப்பட்டு மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழுவார்'' (மாற்கு 9.31)

''இவ்வாலயத்தை இடித்து விடுங்கள்; மூன்று நாளில் இதை எழுப்புவேன்'' (அரு. 2:19) ''என் உயிரை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி நான் அதைக் கையளிக்கிறேன். ... உயிரைக் கையளிக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதனை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு'' (அரு. 10:17,18) இவ்வாறு பற்பல சந்தர்ப்பங்களில் உடன்பாடாகவும் எதிர் மறையாகவும் கிறிஸ்து தமது உயிர்ப்பைக்குறித்து முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். உண்மையின் உறைவிடமாகிய இயேசுவின் வார்த்தைகள் பொய்யாக மாட்டா. ஆம் ''தாம் கூறியபடியே உயிர்த்து விட்டார்'' (மத். 28:6)

தவத்திரு லோ. வ. இராயப்பு மா. ம தி

கிறிஸ்துவின் வாழ்க்கை அவரது மரணத்துடன் முற்றுப் பெறவில்லை உயிர்ப்பும் அவரின் வாழ்வின் ஓர் முக்கிய பகுதி இதை வலியுறுத்தும் நோக்குடன்தான், இன்று அநேக இடங்களில் கிறிஸ்துவின் திருப்பாடுகளைச் சிலுவைப்பாதை மூலம் தியானிக்கும் வேளை 15 வது நிலையாக அவரின் உயிர்ப்பைப்பற்றிய தியானமும் சேர்க்கப்பட்டுள்ளது. இது நம் நாட்டு மக்களுக்குப் புதியதோர் கொள்கையாகத்தோன்றலாம். இருந்தும் திருச்சபையின் இதர நாடுகளில் இது ஒரு வழக்கமாகிவிட்டது. கிறிஸ்து பாடுகளை ஏற்றுக் கொண்டு சாவை அரவணைத்தது உயிர்ப்பதற்காகவே என்பது நம் சத்திய மறையின் நித்திய போதனை.

வாழ்வளிக்கும் வள்ளலைக் கிறிஸ்துவுக்கு நாம் சிறப்புப் பெயர் வழங்குகிறோம். இதன் கருத்து யாதெனில், தம் உயிர்ப்பின் மூலம் கிறிஸ்து தம் செல்வ மக்களாகிய நமக்கும் உயிர் அளித்துள்ளார் என்பதே. எனவே தான் சாவே- உன் வெற்றி எங்கே? சாவே- உன் கொடுக்கு எங்கே? எனச் சாவைப்பார்த்து ஏளனப்புன்னகை புரியும் அவர் நம்மையும் பார்த்து ஒரு வினா எழுப்புகிறார். 'சாவின் மீது உனக்குப் பயமா? பயப்படாதே. நான் சாவை வென்றுவிட்டேன். நான் பட்ட பாடுகளெல்லாம் மகிழ்ச்சியாகவும் மகிமையாகவும் மாறிவிட்டன. என்னையே நான் சாவுக்கு உட்படுத்தி, பின்பு உயிர்த்தெழுந்து வந்திருக்கிறேன். எனக்கு நான் செய்த போல் உனக்கும் செய்யக் காத்திருக்கிறேன். என் உயிரை உனக்கும் உலக மக்களனைவருக்கும் முழுமையாக அளிப்பதற்காகவே நான் உயிர்த்தேன்''

துன்பத்தின் துயரால், வேதனைகளின் விளைவால் உள்ளம் உடைந்திருக்கும் அனைவருக்கும் ஆறுதலளிக்கவல்ல வார்த்தைகள் இவை. கிறிஸ்துவின் உயிர்ப்பின் மூலம் கிறிஸ்தவ மக்களாகிய நம் வாழ்வில் புதுமை மணம் கமழ்கின்றது. இப்புதுவாழ்வை நமக்கு நினைவு படுத்துவதுதான் பாஸ்குத்திருநாள். அது கிறிஸ்து உயிர்த்த நாள். அவருடன் நாமும் உயிர் பெற்ற பெருநாள். நாம் புது வாழ்வு பெற்ற நன்னாள். நம் மகிழ்ச்சியைப் பெருக்கும் பொன்னாள். எனவே ''ஆண்டவர் செய்த நாள் இதுவே. இதிலே நாம் அக்களித்து அகமகிழ்வோம்'' என மகிழ்ச்சிக்குரல் எழுப்புவோமாக. நம் உயிரின் உயிராயிருக்கும் நம் உத்தமர் கிறிஸ்துவை நம்முள்ளங்களிலேற்று, அவரோடு, அவரில், அவர் மூலம் வாழ்ந்து வந்தோமாகில், சாவின் மேல் வெற்றிகொண்ட, மரணத்தின் மேல் தமக்குள்ள வலிமையை நிலைநாட்டிய கிறிஸ்துவின் உயிர்ப்பில் நாமும் பங்கு கொண்டுள்ளோமென்பதை நிரூபிக்க முடியும்.

கிறிஸ்து இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உயிர்த்தாரெனினும், அவர் இன்றும் நம்முடன் உயிரோடிருக்கிறார் என்னும் உண்மையை நம் விசுவாசத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளுகிறோம் பக்களுக்குப் புத்துயிரும் புதிய தெம்பும் அளிப்பதற்காகவே அன்று கிறிஸ்து உயிர்த்தார். அவரின் உயிர்ப்பில் நாம் ஒன்றித்து விட்டோமென்னும் உண்மையை நாம் ஆணித்தரமாக ஏற்றுக்கொண்டோமாகில் நம்மைச் சுற்றிவரவாழும் நம் ஏழைச் சகோதர சகோதரிகளுக்கும் நாம் உயிரளிக்க வேண்டியது. நம் தலையாய கடமை. அநீதிகளுக்கும், அட்டூழியங்களுக்கும் ஆளாக்கப்பட்டு அநேகமக்கள் செத்துமடிவதை நாம் கண்ணூடாகக்கண்டும் நாம் கண்மூடித்தனமாய் இருக்கலாமா? பொய்மை, அநீதி, பகைமை, பிரிவினை, தன்னலம்- இவையனைத்தும் செத்துமடியவே கிறிஸ்து இறந்து மீண்டும் உயிர்த்தார். உண்மை, நீதி, அன்பு. ஒற்றுமை, பிறர்நலம் முதலிய நற்பண்புகள் மக்கள் ஒவ்வொருவர் மத்தியிலும் தழைத்தோங்கவே அவர் உயிர்த்தார். அவரின் உயிர்ப்பால் நீதி, அமைதி, அன்பு, உண்மை என்னும் பண்புகள் நிறைந்த ஓர் புதிய சமூகாயத்தைக் கட்டியெழுப்ப நமக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பையும் சவாலையும் மனமுவந்து ஏற்று அதன்படிவாழப் பாஸ்கு காலம் நமக்கு ஓர் அரிய வாய்ப்பைஅளிக்கிறது. இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி. சாவின் மேல் வெற்றிகொள்ளவும், மரணத்தின் மேல் நம் வலிமையைக்காட்டவும், உயிர்த்த கிறிஸ்து நமக்கும் அதிகாரம் அளித்துள்ளாரென்பதை அத்தாட்சிப்படுத்துவோமாக.

## ஜெருசலேமில் எழுந்த கோஷங்கள்

இறைமகன் இயேசு ஜெருசலேம் நகரிற்குள் வந்தபோது மக்கள் கூட்டம் அலைமோதியது. கூட்டம் கூட்டமாக கூடினர், அவர்கள் இயேசுவைக் கண்டதும் கோஷம் எழுப்பி வரவேற்றனர். ''தாவீதின் குமாரனுக்கு ஓசான்னா'' என்று ஆர்ப்பரித்தார்கள். இயேசு அவர்களின் அந்த மகிழ்ச்சியான வரவேற்பை ஏற்றுக் கொண்டார்.

அன்று இயேசுவை கோஷம் எழுப்பி ஆர்ப்பரித்து மகிழ்ச்சியுடன் வரவேற்ற அந்த மக்கள் அதே மக்கள்தான் ஐந்து நாட்களுக்குள் ''கட்சி மாறிவிட்டார்கள்.'' பெரிய வெள்ளிக் கிழமையன்று அதே மக்கள் தான் ''சிலுவையில் அறையப் படட்டும்'' (மத். 27:23) என்ற உரக்க கத்தி கோஷமிட்டார்கள். இம் மக்களுக்கு இயேசு பணம் கொடுத்திருந்தால் ''தாவீதின் குமாரனுக்கு ஓசான்னா''மீண்டும் பாடியிருப்பார்கள் போலும். இதுதான் அரசியல் கோஷம், இதுவெறும் அரசியல் வேஷம்:

அன்று ஜெருசலேம் நகரில் மட்டும்தானா இந்தக் கோஷ அரசியல். இல்லை இல்லவே யில்லை. இன்று நம் நாட்டில் மட்டும் நடப்பது என்ன?

''பிணக்குவியல் எங்கேயோ கழுகுகளும் அங்கே'' என்பது போல்தான் எம்மக்கள். எம்மத்தியில் இன்று எத்தனை ''யூதாஸ்'' கூட்டம். இவர்கள் எல்லாம் ஏன் இப்படிச் செய்கிறார்கள்.

ஆனால் அன்று ஜெருசலேம் நகரில் நடந்த மிக வருந்தத்க்க செயல் என்னவென்றால் இந்தக் கூச்சல்தான் இறுதிவரை வெற்றிகாண நின்றது. இயேசுவின் தீர்ப்பைப்பற்றி நற்செய்தியாளர்களில் ஒருவரான புனித லூக்காஸ் உணர்ச்சி வசத்துடன் எழுதுகின்றார். ''அவர்கள் கூச்சலே வெற்றி கண்டது'' (லூக். 23: 23)

சந்தியோகு பிரபா

## இயேசுவின் மரணம் உயிர்ப்பு

தேவன் யேசுவின் - உடலைச் சிலுவையில்
கேவலமாக அறைந்து மகிழ்ந்த
பாவ மனிதரின் பகுத்தறி வின்மையால்
தேவன் யேசுவின் மரணம் புகன்றது.

பாரச் சிலுவையைத் தோளில் சுமந்து
கூராய் தீட்டிய சாட்டியின் கொடுமையையும்
சேர(த்) தேவன் வீதி வீதியாய் - சவுக்கின்
கோர அடியுடன் ஊர்வலமாகினர்.

மக்களின் முன்னே மரணித்த - யேசு
மறுநாள் மூன்றினில் உயிர்த்தே - எழுந்தனன்
பக்குவம் பெற்ற மனுமகன் - காட்சியை
பேறுபெற்றவர் பார்த்து மகிழ்ந்தனர்.

யேசுவின் வாழ்க்கை முடிந்தது - என்றனர்
பேசும் யேசுவின் வார்த்தையைக் கேட்டனர்......
யாவும் தெய்வத் திருவுளமாகிட
நோயும் நொடியும் நீங்கிடலாகினர்.

'' தொகுப்பு ''
செல்வி. ஞானமலர். அந்தோனிப்பிள்ளை
NO .26. குமரபுரம், பரந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்காலை- மறைக்கல்வியாசிரியர் ஒன்றியம்

மறைக்கல்வி கற்பிக்கும் ஆசிரியாகள் ஒன்றியம் வங்காலைப் பங்கில் 29. 1. 89 ஞாயிறு மாலை 5 மணிக்கு குருமனையில் கூடியது. இருபது ஆசிரியர்கள் சமூகமளித்தார்கள் பங்குத் தந்தை அருள்நாதர் அடிகள் திருத்தந்தையின் திருமடல் மறைக்கல்வியின் அவசியத்தை உணர்த்தியுள்ளதையும் மாணவர்களின் உருவாக்கம், ஒழுக்க நெறியில் மறைக்கல்வி பெரிதும் இக்காலக்கட்டத்தில் தேவை, வேதாகம அறிவோடு நின்று விடாது மறை அனுஷ்டானங்களிலும், விழிப்பாயிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர்கள். ஓய்வுபெற்றவர்களின் தொழில் மறைக்கல்வி கற்பிப்பது என்ற நிலை மாறி ஒவ்வொரு கத்தோலிக்க ஆசிரியரும் அழைப்பை ஏற்கவேண்டும்- மகாவித்தியாலய ஆசிரியர்களும் இப்பணியில் ஆர்வம் காட்டவேண்டும் என்று ஒன்றியத்தலைவர் திரு. செ. சூசையப்பு, பீரிஸ்(முன்னாள் அதிபர்) பணிவாய் வேண்டுதல் விடுத்தார்கள். சென்ற ஆண்டைப் போல் விவிலிய வினாவிடைகள் போட்டிக்கு ஆயத்தம்செய்யவும், ஞாயிறு திருவாசகங்களை நினைவுறுத்தவும், இவ்வகுப்புக்கள் பயனபடுவதோடு- ஒரு பாடத்திட்ட அடிப்படையில் செயற்படவேண்டும் என்ற தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் 5ம், 6ம். 7ம் - ஆண்டுகட்கு சிறுவர் வேதாகமம்- 8ம். 9ம்- ஆண்டுகட்கு புனித லூக்காஸ் நற்செய்தி. 10ம், 11ம்- ஆண்டுகட்கு லூக்காஸ் நற்செய்தி, 12ம்- ஆண்டுக்கு புனித லூக்காஸ் நறசெய்தியுடன் அப்போஸ்தலர் பணியும் கற்பிக்க முடிவுசெய்யப்பட்டது. செயலர் திரு A பங்கிராஸ் சோசை நன்றி தெரிவித்தார்.

தகவல்:
V. A. L.

# கல்மடுநகர் எஸ். வி. பி. பந்தி

யாழ். மறை வட்டத்தில் சிறப்புற்று விளங்குவதுவட்டக்கச்சிப் பங்கு. இப்பங்கின் ஓர் பகுதிதான் கல்மடுநகர். கிளிநொச்சியில் இருந்து கரடுமுரடான, காட்டுப் பாதை மார்க்கமாகத்தான் இங்கு செல்லமுடியும்.

இங்கும் ஏழை எளியவர்களின் குறைகேட்டு துயர் துடைக்க எண்ணிச் செயல்பட விளையும் ஒரு சில இளம் உள்ளங்கள் இருக்கத்தான் செய்கின்றன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு செயற்படத் தொடங்கிய இவர்களைத் தற்போதைய பங்குத் தந்தை அருள்திரு. இரா. சூசைநாதன் வழி நடத்தி வருகின்ருர். "தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை" என்ற தற்கொப்ப, ஆன்ம ஆலோசகரின் வழிநடத்துதலால் அன்பின் சேவையைச் செய்து வருபவர்கள் 10-ம் பத்திநாதர் பந்தியின் சகோதர சகோதரிகள்.

தற்போதைய சிரமங்களையும் பொருட்படுத்தாது; யாழ் மத்திய சபையின் செயலாளர் சகோ. சி. செலஸ்ரீன் 5-3-89 அன்று மேற்படி பந்தியைத் தரிசித்தார் அவர்களின் சேவைகளை அறிந்தார். தேவைகளைக் கேட்டறிந்தார். இவற்றிற்கு உதவுமுகமாகவும்; அவர்களின் சேவைகள் மென் மேலும் சிறப்புறவும் வேண்டிய ஆலோசனைகளை வழங்கினுர். அவர் தமதுரையில் வீட்டுத் தரிசனையின் முக்கியத்துவத்தை மிகவும் வலியுறுத்தினுர்.

தகவல்:-
நாவாயூர் தயாளன்

# நெடுந்தீவுப் பங்கில் புனித யூதாததேயு விழா

கடலலை தாலாட்டும் கன்னி நெடுந்தீவின் தென்கரையோரமாக கோவில் கொண்டெழுந்தருளி இருக்கும் புனித யூதாததேயு திருநாள் 26- 2- 89 பங்குமக்களால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர் என பல்லாயிரம் மக்களால் போற்றிப் புகழப்படும் புனித யூதாததேயுவின் திருநாளின் ஆயத்த நிகழ்ச்சியாக 23- 2- 89 மாலை சிற்றாலயத்தின் கொடியை ஏற்றி விழாவை தொடக்கிவைத்தார் எம் பங்குத்தந்தை M. M. V அமிர்தகுமார் அவர்கள். தொடர்ந்து மூன்று நாட்கள் செபங்கள், ஆராதனைகள், வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று இறுதி நாளான 26- 2- 89 காலை 7.30 மணிக்கு பெருநாள் பலியை ஒப்புக் கொடுத்தார். பங்குத்தந்தை அமிர்தகுமார் அவர்கள் அவருடன் பலியில் இணைந்து சிறப்பித்தார் அருள்செல்வன். சேவியர் கருணுரத்தன அவர்கள்.

அவர் தம் மறையுரையில் அன்று மோயீசனுக்கு முட்செடியில் காட்சி கொடுத்த ஆண்டவர் சொன்னர். நான் இருக்கும் இடம் பரிசுத்தமானது உன் பாதணிகளை கழட்டு என்று. ஆனல் நாம் கூடியிருக்கும் இதே இடமும் பரிசுத்தமான இடம் நாம் நம்மிடமுள்ள, பொருமை, ஆங்காரம், காய்மகாரம், விட்டுக்கொடுக்கா மனப்பான்மை போன்றதும் அவற்றுக்கு துணைபோகும் சகல பழக்கவழக்கங்களையும் இந்த இடத்தில் கழட்டி விட்டு தவக்கால இந்த நாட்களில் பலியில் முழுமனதுடன் பங்கு கொள்வோமாக என கேட்டுக்கொண்டார். இறுதியாக அங்கு கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது குழுமியிருந்த புனித யூதாவின் பக்தர்களுக்கு சொருப ஆசீர்வாதத்தை வழங்கினர்.

தகவல்:- நெடுநகா் நேசன்.

# பருத்தித்துறைப் பங்கில் மரியன்னையின் காட்சி

அன்னைமரியாளின் மாட்சிமையை மாந்தர்க்கு எடுத்தியம்புகின்ற வகையில் பருத்தித்துறைப் பங்கில் மரியன்னையின் கண்காட்சி நடைபெற்றது. மரியன்னையின் மகத்துவம் என்ற தலைப்பில் இம்மாதம் 5-ம், 6-ம் திகதிகளில் பருத்தித்துறை சென்தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலையில் இக்கண்காட்சி இடம் பெற்றது. இதனை அருள்திரு ஆபரணம் சிங்கராயர் அடிகளார் ஞாயிறு திருப்பலியின் பின் ஆரம்பித்து வைத்தார்.

மறை நூலில் மரியன்னை, பாரம்பரியத்தில் மரியன்னை, திருச்சங்கப்படிப்பினைகளில் மரியன்னை, காட்சிகளில் மரியன்னை என்ற பகுதிகளாக இக் கண்காட்சியின் சாரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. மரியன்னையைப்பற்றியும் அவளின் மகிமையைப்பற்றியும் பல புதிய விடயங்களை அறிந்து செல்ல குடத்தனை, மணற்காடு. சக்கோட்டை, கரவெட்டி போன்ற பல இடங்களிலிருந்தும் அன்னையின் பக்தர்கள் வந்திருந்தனர்.

இக் காட்சியினைப் பாடசாலை மாணவர்கள் உட்பட பெற்றோர், பெரியோர் அனைவரும் வந்து பார்த்துப் பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இக் கண்காட்சியை அனைவருக்கும் பயனுள்ள முறையில் செயல்படுத்த முன்னின்று உழைத்த மறையாசிரியர் திரு. இ. ம ஜெயசீலன் அவர்களுக்கும், பருத்தித்துறை பங்குத்தந்தைக்கும் உதவியாக அருள் செல்வியர், மயிலிட்டிப்பங்கு இளைஞர்கள், பருத்தித்துறை பங்கு இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பங்கு அமைப்புக்களில் உள்ளோர் உதவிக்கரம் நீட்டி நின்றனர். மரியன்னையின் கண்காட்சியை ஒட்டிய வினுவிடைப் போட்டி அனைவரையும் கவர்ந்த ஒரு விடயமாகும். மரியன்னையைப் பற்றி அறிய மரியன்னை பேரில் உள்ள பக்தி வளர இக் கண்காட்சி பெரிதும் துணை நின்றது.

அ. மோசேஸ் தேவரத்தினம்

# அருள்திரு யேசுராசா அடிகளாருக்கு வன்னி மக்களின் பிரியாவிடை

வவுனியாவில் உள்ள இறம்பைக் குளத்தில் அமைந்துள்ள. புனித அர்ச் அந்தோனியார் ஆலயப்பங்கை பரிபாலிக்கும் பொறுப்பைக் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக கையேற்ற அருள் திரு யேசுராஜா அடிகளாருக்கு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ, இந்து, முஸ்லீம் மக்களால் மகத்தான பிரியாவிடை விழா கொண்டாடப்பட்டது.

அன்னுர் 05- 02-89 இல் மடுத்திருப்பதிக்கு மாற்றப்பட்டு இருக்கின்றார் என்பதை அறிந்ததும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் தங்கள் பங்குகளிலும் பாலர் பாடசாலையிலும் சிறுலர் அநாதை இல்லங்களில், அக்கடமிக் பாடசாலையிலும் சேவை நலன் பாராட்டி விழா எடுத்தனர். 05-02-89 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் அருள் திரு பி. யேசுராஜா தலைமையில் அருள் திரு விற்றர் அவுதப்பர் அருள் திரு சி. எஸ். குரூஸ் அடிகளாருடன் கூட்டு நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பின்னர் புனித அந்தோனியார் ஆலய உபதலைவர் திரு மந்திரி செபஸ்தியாம்பிள்ளையின் தலைமையின் கீழ் இறம்பைக்குள மகளிர் மகாவித்தியாலய மாணவியரின் "பான்ட்" வாத்தியம் முழங்க பிரியாவிடை நாயகரையும் புதிய பங்குத்தந்தையையும் உதவிப் பங்குத்தந்தையையும் பங்கு மக்கள் இறம்பைக்குள மகளிர் மகாவித்தியாலய மேடைக்கு அழைத்துச் சென்றனர். உபதலைவரின் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. சிசிலியா மன்றத்தினர் தூய ஆவியர் கீதம் இசைக்கப்பட்டது. திரு. தயாளன் ஆசிரியரால் வரவேற்பு உரை கூறப்பட்டது. பின்னர் திரு. டேவிற் அவர்கள் பிரியாவிடை நாயகரின் வரலாற்றையும் வன்னி மாவட்டத்தில் அவர் செய்த சேவையையும் அவர் அமைத்த கட்டிடங்களையும் மக்கள் அன்னாருடைய சேவையினை நினைவு கூரும் வகையில் அவரின் சேவைகளை அடுக்கடுக்காக எடுத்துரைத்தனர்.

பின்னர் இறம்பைக்குள மகளிர் மகாவித்தியாலய உப அதிபர் S. அந்தோனியா ஆசிரியை பிரியாவிடை நாயகர் செய்த சேவையை மக்கள் கண்ணீர் மல்க கவிதை மூலம் வடித்துக் கொடுத்தார். அருள் சகோதரி அமலின் அருள் சகோதரிகளுக்கும் மக்களுக்கும் செய்த சேவையைப் படிப்படியாகப் பாராட்டிப் பேசினுர்.

மக்களின் கண்ணீர் தடாகத்தின் மத்தியில் பிரியாவிடை நாயகர் எழுந்து "வயதிலும், அறிவிலும், ஆற்றலிலும் குறைந்த என்னை மன்னுர் மறை மாவட்ட ஆயர் வவுனியா பங்கை ஏற்று நடத்தும்படி பணித்தார். நாட்டில் கொலைகளும், கொள்ளைகளும், பொருட்சேதங்களும், தீக் கொடுமைகளும், கைது செய்யப்படுவதுமான இந்த காலகட்டத்தில் தூய ஆவியின் துணையோடு பொறுப்பேற்றேன். பங்கு மக்கள் எனக்குக் காட்டிய அன்புடனும் ஆதரவுடனும். புனித அந்தோனியாரின் உதவியுடனும் என்னைப் பரிபாலிக்க முடிந்தது. எனக்கு நீங்கள் காட்டிய அன்பையும் ஆதரவையும் தற்போது பொறுப்பேற்றுள்ள வயதிலும், அறிவிலும், ஆற்றலிலும் நிறைந்த புதிய பங்குத் தந்தைக்கும், உதவிப் பங்குத்தந்தைக்கும் காட்டுவீர்களானல் என்னிலும் பார்க்க கணக்கிட முடியாத அரிய சேவைகளை செய்து முடிப்பார்கள் என்பது திண்ணம்" என்ருர். இறுதியாக புதிய பங்குத் தந்தையின் உரையுடனும், ஆலயசபை உதவி தலைவரின் நன்றி உரையுடனும் மாணவர்களின் நகைச்சுவை நாடகத்துடனும் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

பி. திருச்செல்வம்

# பூம்புகார் புனித பிலிப்பு நேரியார் பெருவிழா

பல வருடங்களுக்குப் பின் பூம்புகார் கிராமம் விழாக் கோலம் பூண்டது யாராலும் மறக்கமுடியாத ஒன்று. மாசி மாதம 5-ந் திகதி இப் புனிதரின் விழா கொண்டாடப்பட்டது. இதற்கு ஆயத்தமாக மூன்று நாட்கள் ஆராதனைகள் நடைபெற்றன. வழிபாடுகளை பாஷையூர் உதவிப்பங்குத் தந்தை ம. பெ. ஞானரத்தினம் அவர்கள் நடத்திஞர்கள் திருநாட் திருப்பலியை அருள் திரு கமிலஸ் நிமலனும் இரு தியாக்கோன்களும் (அன்ரனி, பீற்றர்) சேர்ந்து ஒப்புக் கொடுத்தார்கள். திருச்சுருப ஆசீருடன் விழா இனிதே முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன மாற்றம்

— தாவீது தாசன்

சிறுகதை

''இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன்...''

என்ற பாடலை இனிய குரலால் இன்பராஜ் பாடினான். அப்பாடல் அடங்கியிருந்த அயல் எங்கும் மாசி இருளில் தெளிவாகக் கேட்டது.

இன்பராஜ், அன்பழகன், பிலிப் மூவரும் கூடும் இடம் தான் சக்தி நிலயம்.

அமைதியின்றி என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்று மக்கள் அங்கலாய்க்கும் வேளையிலும் இப்மூவரும் தம் கவலை போக்க, மனச்சாந்தியைப் பெற, பகிழ்வுடன் இருக்கக் கூடுப் இடம்தான் சக்தி நிலயம்.

சக்தி நிலயம் என்ற பெயர் அன்பழகனால் தாகசாந்திதீர்த்த அந்த இடத்திற்கு இட்ட பெயர்.

இன்பராஜ் ஒரு கலைப்பட்டதாரி. மூன்று வருடங்களுக்கு முன் ஆசிரியராகக் கண்டியில் கடமையாற்றியவர். அரசியலைக் கரைத்துக் குடித்தவர். அரசியலை ஒரு பாடமாகக் கற்பித்தவர். 15 வருடங்களுக்கு முன் தன் மாமி மகளைக் காதல் மணம் புரிந்தவர். சீதனம் இன்றி சிக்கனத் திருமணம் செய்தவர்.

காலத்தின் கோலத்தால், தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தால் வேலையை விட்டு விட்டு ஊரோடு வந்தார். வேலையை விட்டுவிட்டு ஊரோடு வந்ததும், வீட்டிலே போராட்டம் தொடங்கியது.

எந்த வேலையும் செய்ய அவர் தயாராக இருந்தும் வேலைதான் கிடைக்கவில்லை. மனைவி, மாமி, மூன்று பிள்ளைகள் பட்டினியால் வாட நேர்ந்தது. இவ்வேளையில்தான் அன்பழகனின் அன்புக்கரம் கிடைத்தது. இருவரும் பாடசாலை நண்பர்கள்.

அன்பழகன் பேச்சில் அழகுத்தமிழ் வரும். பாவலர் பாரதிதாசன், கவிஞர் கண்ணதாசன் கவிதைகள் கரைந்தோடும். இளமையில் வேண்டாத சகவாசங்களால் மதுவுக்குள் மனதைப் பறிகொடுத்தார். தான்பெற்ற இன்பத்தை இன்பராஜ் பெறவும் வழிவகுத்தார்.

பிலிப், சிறுவயதிலேயே கலையார்வம் மிக்கவன் ஆடல், பாடல் நடிப்பென்றால் அவனுக்குக் கொள்ளை ஆசை. அவனின் கலையார்வம் சினிமாப் பித்தாக மாறியது. ஐந்தாம் வகுப்புக்குமேல் அவனால் கல்வியைத் தொடரமுடியவில்லை. சினிமாத் தியேட்டர்கள் அவனுக்கு நடிப்புக் கற்றுக் கொடுத்தன. கல்வியில் நாட்டமில்லாப் பெற்றோர் அவனைத் தொழிலுக்கு அனுப்பினர். கடலுக்குப் போகும்போது வள்ளத்தின் அணியத்திலிருந்து அழகாகத் தாளம் போட்டுப் பாடுவான். ஊர்க்கூத்துகளில் அவன் குரல் ஒலிக்கும். ஆனால் இன்று பாடமுடியாது. கலவர காலத்தில் ஏற்பட்ட சூட்டுக் காயத்தால், குரல் கம்மிவிட்டது. ஆனால் அவன் கையில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு தாளம்போடுவதில் வல்லவனாக மாறினான். சக்தி நிலயத்தில் இன்பராஜின் பாடலுக்கு பிலிப் தகரப்பேணியில் அடிக்கும் அடி அயலையே கவர்ந்திழுக்கும்.

''நான் பெற்ற செல்வம் நலமான செல்வம்,'' என்று அடுத்த பாடலைத் தொடங்கினான்.

அவ்வேளை...

வீதியிலிருந்து 'அப்பா, அப்பா, அம்மம்மா உங்களை வரட்டாம்,'' என்று கத்தினான் இன்பராஜின் இனியமகன் இனியவன். மகனின் கத்தல் கேட்டு பாட்டை நிறுத்திவிட்டு எழுந்தான். மாமி மெச்சிய மருமகன் இன்பராஜ் வீதிக்கு வந்தான்.

''ராசா, ஏன் அம்மம்மா கூப்பிட்டவ,'' என்று தந்தை மகனிடம் அன்பொழுகக் கேட்டான்.

''உங்களைக்கூட்டிக்கொண்டு செல்வம் மாஸ்ரரிடம் போகட்டாம்,'' என்றான்.

இன்பராஜ், எவ்வளவுதான் வெறி ஏறினாலும் மாமி சொல்லைத் தட்டமாட்டான். ''பிலிப் நானெருக்கா செல்வத்திடம் போயிற்று வாறன்,'' என்றான் ''செல்வத்திடம் போனால் அவன் அலட்டுவான். இவன் அவன்ர பேச்சைக் கேட்டு விட்டு வரவே மாட்டான்,'' என்றான் அன்பழகன்.

நூறு மீற்றர் தூரத்திலுள்ள கணித ஆசிரியர் கலைச்செல்வன் வீடு நோக்கிச் செல்லுகையில்,

''ராசா, ஏதும் மணக்குதாடா,'' என்று மகனிடம் கேட்டான் ''குடிச்சமாதிரித் தெரியுதாடா?, என்று அடுத்த கேள்வியையும் கேட்டான்.

''ஏன் அப்பா கேக்கிறீங்க, சேருக்குப் பயமா?''

''பயம்! சீ அப்படியொண்டுமில்லை, ஒரு மரியாதை அவனுக்கு குடி என்றால் பிடிக்காது. எங்கள் இனமே குடியால் சுட்டிச்சுவராகிப்போறது என்று அடிக்கடி சொல்லுவான். அவனைப்போல எத்தனை பேர் இங்கே இருக்கினம்,'' என்று கதைமுடிக்க, வீடும் வந்தது.

கலைச்செல்வன் வீட்டில் செபம் சொல்லும் சத்தம்கேட்டது. வெளிக் கதவைத் திறந்து கொண்டு இருவரும் உள்ளே சென்றனர்.

'அப்பா, பிதாவே, தபசு காலம், மனமாற்றத்தின் காலம், கிறிஸ்துவின் பாடுகள், மரணத்தைச் சிந்திக்கும்காலம், இக்காலத்திலே எங்கள் மக்களிடையே அன்பின் வலிமையை தியாகத்தின் மாண்பை விதைத்திட வேண்டுகிறேன். எம்பாடுகளை நீர் அறிவீர். அரசியல் போராட்டத்தில் அல்லல்கள்! இழப்புகள் எத்தனை! எத்தனை!! என் நல்ல தேவனே இத்தபசு காலத்தில் நாம் ஒவ்வொருவரும் உம்மகனின் பாடுகளை எம் உள்ளத்தில் உணர்ந்து, எம்மை அக அழுக்கை அகற்றி, அயலாரை அன்புடன் நேசித்து புதிய மக்களாக மாற அருள்தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறேன்;'' என்ற செல்வத்தின் குரலைத் தொடர்ந்து ''ஆமென்,'' என்ற ஒலிகள் வந்தன

கதவு திறக்கப்பட்டது. கலைச்செல்வன் இன்பராஜைக் கண்டதும் மகிழ்ச்சியுடன்'' ''வாடாப்பா, கண்டுகனநாள். ஏன் வெளியே நிற்கிறாய் வந்து இரு,'' என்றவன் ''இனியவனும்வந்திருக்கிறான்போல,''

''சே என்னை முதலில் மன்னிச்சுக்கோ! சாடையாப்போட்டிருக்கிறன்,''

''அது கிடக்கட்டும் வந்த விசயத்தை சொல்லன்,''

''இவன், படிப்பில படுமோசம், ஊர் சுத்துறதும், ரிவி பார்க்கிறதும்தான் வேலை.' அதுதான் உன்னட்ட வந்தனான்.''

''இல்லை சேர், அப்பா''

''சரி, சரி நீ போய்ப்படி, நான் அப்பாவோட கதைக்கிறன்'', என்றதும் இனியவன் சென்றுவிட்டான்.

''நாங்கள் பிழைகளை விட்டுவிட்டு, பிள்ளைகளைச் சாட்டக் கூடாது.

''இப்ப நான் என்னசெய்ய'' குடியை விடச் சொல்றியா! இண்டையோட விடுறன்.''

''இப்படி நீ எத்தனைமுறை சொல்லிப் போட்டாய் உனர சிநேகிதன் பிலிப், உழைப்புக் களைப்பில் குடிக்கிறான்.

அவனுக்குப் பிள்ளையா குட்டியா? எனகிறாய் ''

''அன்பழகன் ஒவரைம்மில் குடிக்கிறான். வீட்டையும் கவனிக்கிறான் நான் குடிச்சால் என்ன என்று கேட்கிறாய். குடியை விடுவேன் என்றும் சொல்கிறாய்;'' என்றதும், இன்பராஜ் இருமினான். இருமல் நிற்க சில நிமிடம் சென்றது.

''இன்பம் குடியின் கெடுதி பற்றி நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை. எங்களிடம் உள்ள ஒரேயொரு குறை, பிழையைப் பிழையென ஒத்துக்கொண்டாலும், மறறவர் செய்யும் பிழையுடன் ஒப்பு நோக்கி திருந்த மறுப்பது தான்,'' என்ற செல்வம் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

இன்று முதல் தபசு காலம் முடியும்வரை சக்தி நிலையத்தில் நீ ஆற்றும் இன்னிசையை நிறுத்து. அக்காலத்தில் உன் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்றுக்கொடு. நான் கணிதம் சொல்லிக்கொடுக்கிறேன். சரிதானே!'' இருமலிடையே சரி என்றான் இன்பராஜ்.

★

''இன்பம், மனக்கவலைக்கு மருந்து மதுவல்ல,'' 'செபம்'.

''தினமும் நீ பிள்ளைகளுடன் செபம் சொல்லி வா! இது என் அனுபவவைத்தியம்,''என்றான் கலைச் செல்வன்.

'சரி அப்ப வாறன்,' என்று கூறிக்கொண்டு எழுந்த இன்பராஜை இருமல் எழவிடாமல் தடுத்தது. கதிரையில் மெல்ல இருந்தான். இருந்தவன் சிறிது நேரம் கலைச்செல்வனுடன் இருந்து கதைத்துவிட்டு மன நிறைவுடன் வீடு நோக்கி நடந்தான் வழியில் அன்பும், பிலிப்பும் இடைமறித்தனர். அன்பு ''எடுத்தது, அப்படியே இருக்குது. வந்து முடிச்சுட்டு போவன்,'' என்றான்.

''என்றால் இனி குடிக்கமுடியாது. தலையிடிக்குது, நெஞ்சு வலிக்குது, நீங்க குடியுங்கோ, நான் வாறன்'', என்று கூறிய இன்பராஜ், விறு விறு என்று வீடு நோக்கி நடந்தான் ''எனக்குத் தெரியும், அவன் கூறிய அன்பழகன் ''நீ, வாடா நாங்க முடிப்பம்,'' என்று திரும்பினான் அங்கு பிலிப் இல்லை.

பிலிப் இன்பத்துடன் போய்க்கொண்டிருந்தான்.

(யாவும் கற்பனை)

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-34

அடைக்கலம் : வெள்ளி விரதம் இருக்கப் போறம். அதுதான் சமையலுக்கு சாமான் வேண்டப்போறம் அண்ணை.

குருசுமுத்து : அப்ப சாப்பாட்டைத்தான் எண்ணி கவலையோட அந்த நாளைக் கழிக்கிறியள் போல.

அடைக்கலம் : அண்ணே ...... இருந்துட்டு ஒருநாள் விரதம் இருக்கிற தெண்டா எவ்வளவோ களைப்பா இருக்கு.

குருசு :- ஒரு நேர சாப்பாட்டை ஒறுக்க இத்தனை ஆயத்தமும் பிரசாரமும் செய்யிறியள், எத்தனை சனம் மூன்று நேர சாப்பாடு இல்லாம அலையுதுகள்.

அடைக்கலம் : அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது அண்ணை.

குருசு :- விரதம் இருக்கப்போறது, மற்றவையள் அறியாதபடி, உன் உடம்பாலும், உதட்டாலும் சொல்லாது, நீ ஒறுத்ததை மற்றவனின் ஒரு நேர பசியை போக்கிற தோட, அன்றைய இறைபாடுகளை சிந்திப்பதிலும் உணர்த்துவதிலும் தான் கிறிஸ்து+அவனக வாழலாம் பாரு.

## மூவாமுதல்வனுக்கு முத்தங்கள் மூன்று

கர்த்தன் திருச்சுதனைக் கன்னிமரியன்னையவள்
பெற்றெடுத்தபோது பெரிதுவந்து – முத்தனையாள்
கைத்தலத்திலேந்திக் கனகமுலை பாலூட்டி
வைத்து முத்தமிட்டாள் மகிழ்ந்து

காட்டிக் கொடுக்கக் கயவர்களை ஒன்று
கூட்டிக்கொண்டேகிக் கொடியோனும் – யூதாஸ்
குரு (வே) வாழ்கவென்று கொடுத்தானே முத்தம்
திருவின் முகத்திலே தான்

கல்வாரி மேட்டிற் கால்கடுக்க நடந்து
சொல்லார் திருமேனி சோர்வுற்று – நல்லாயன்
இகத்தை முகத்தழுந்த இட்டானே முத்தம்
மிகத்தான் மயக்குற்ற தால்

ஆ. செகராசசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகக் கதை:-

# விசேட ஒறுத்தல்

இரண்டு நாய்கள் அண்ணன், தங்கையாக ஒரு பணக்கார கிறிஸ்தவன் வீட்டில், மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தன. இரண்டிற்கும் மாமிசம் என்ருல் உயிர். இறைச்சி என்ருல் இரண்டிற்கும் அளவற்றசந்தோஷம் ஏற்பட்டுவிடும். சிலநேரங்களில் அவைகள் ஊளையிடத்தொடங்கிவிடும். ஒரு வெள்ளிக்கிழமை அந்த பணக்கார கிறிஸ்தவன் வீட்டில், மத்தியானம் இறைச்சி சமைக்கப்படவில்லை. மாழுக மரக்கறிதான் சமைக்கப்பட்டது. இரண்டு நாய்களுக்கும் கவலை ஏற்பட்டது, அண்ணன் நாய், தங்கை நாயிடம் அடியே சாந்தி, இண்டைக்கு நம்மட வயித்தில! நம்மட எசமான் மண்ணைக் கொட்டிப்போட்டான்: இன்று ஏன் இறைச்சி சமைக்கவில்லை? உனக்கு தெரியுமோ?'' என்று சற்று எரிச்சலுடன் கேட்டது' '' ஜிம்மி அண்ணே! இவையள் இண்டைக்கு பங்குச் சுவாமிக்கு விருந்து வைக்கினம், இன்று வெள்ளிக்கிழமை தானே, தாங்களும் ஒரிஜினல கிறிஸ்தவர் என்று காட்டத்தான'' அண்ணன் நாயக்கு சிரிப்பு வந்து விட்டது. (சிரித்தவாறே) அப்ப இவையள், தவக்காலம் தொடங்கியபின், மூண்டு வெள்ளிக்கிழமையும் நல்லா இறைச்சி சாப்பிட்டவை'' என்று கூறியது. ''இப்படியான விசேட ஒறுத்தல்கள் இவையளுக்கு வாடிக்கை, ஆனுல் எமக்கு வேடிக்கை'' என்று, 'தங்கை' நாய் மறுமொழி கூறியது. இந்தநேரத்தில் வீட்டுக்காரி துப்புத்தடியுடன் அநதநாய்களை நோக்கி வந்தாள். ''ஓடி வாடி,' என்று 'அண்ணன்' நாய் கூறிக்கொண்டே வீட்டின் பின்புறம் தோக்கி ஓடியது. அங்கே வேலைக்காரப்பெண் மீன் சமைக்க மீன்களை வெட்டிக் கொண்டிருந்தாள்.

★ விசேட ஒறுத்தல்கள் இன்று மும்முரமாக நடக்கத்தான் செய்கின்றன. அவை எமக்கு மனச்சுத்தியை அளிக்காவிடில், எல்லாமே வீணுகிவிடும்!!

— நிலான் சந்தாம்பிள்ளை

---




அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை
26-3-1989

அன்பு இளம் உள்ளங்களுக்கு

''ஓசான்னு! தாவீதின் குமாரனுக்கு ஓசான்னு!'' என்று பாடியவர்கள், பவனியிலே பங்கேற்றவர்கள் இறுதியில். ''இவன் வேண்டாம். இவனைச் சிலுவையில் அறைந்து கொல்லுங்ள்'' என்று கூச்சலிட்டார்கள்; வாழ்வதற்குத் தகுதியற்றவர் எனக் கிறிஸ்துவை வாதைப்படுத்தினுர்கள்; சிலுவைப் பயணத்தில் அவரது இயலாமையைச்சுட்டிக்காட்டி ஏளனப்படுததினுர்கள்.

இன்றும் அதே தொனியில் இறையன்பை, இறையருளை, இறையிரக்கத்தை ஏற்காமல் நாம் வாழ்ந்து வருகின்ருேம். கல்நெஞ்சன் யூகர் என்று சொல்லிக் கொண்டு கல்மனம் கொண்டவர்களாய் நாம் வாழ்ந்து வருகின்ருேம். இறைவனின் சாயலாய் படைக்கப்பட்ட மனிதர்களை, எமது சகோதரங்களாய் வாழ வேண்டிய எமது அயலவரை வாதைப்படுத்தி வாழ்ந்து வருகின்ருேம். வாழ்வைக் கெடுக்க அழைக்கப்பட்ட நாம் மனித வாழ்வினை அழித்து வருகின்ருேம்.

எனவே, கிறிஸ்துவின் சிலுவைப் பயணத்திலே எமக்கும் பங்குண்டு என்பதை உணர்வோம்.

''நாங்கள் சுமைகள் அல்ல, சுமைதாங்கிகள்; பிறருக்குச் சிலுவைகள் அல்ல, சிலுவை சுமப்பவர்கள்'' என்பதை ஏற்று கிறிஸ்துவின் இரட்சணிய செயலாற்றலிலே பங்குகொள்வோம்.

நல்வாழ்த்துக்களுடன்,
அன்பு நெஞ்சன் வி. பி.

---

## மனமும் மனச்சாட்சியும்...

ஒரு பணக்காரன் வீதியில் சென்றுகொண்டிருக்கும்போது அவருடைய சேட் பக்கற்றிலிருந்து, பத்து ரூபா தாள் ஒன்று கீழே விழுந்தது. அதன் வழியே அவருக்குப் பின் வந்துகொண்டிருந்த ஏழைச் சிறுவன், அதைக்கண்டு, தன் பசிக்கொடுமையின் நிமித்தம் ஓடோடிச் சென்று அதை எடுத்துக் கொள்கின்ருன். இந்நிலையில இரண்டு சிந்தனைகள் போட்டி இடுகின்றன மனமும், மனச்சாட்சியும் போராடுகின்றன.

மனம்:- எனக்கு சரியாகப் பசிக்கிறது. இதை அவரிடம் சென்று கொடுத்துவிட்டால் என் பசிக்கு......

மனச்சாட்சி:- இல்லை! அதைக் கொடுத்துவிடு அவனும் உன்னைப்போல் மனிதன்தானே??

மனம்:- என் ஏழ்மை நிலையைக்கண்டு, இறைவன்தான் இதை எனக்கு தந்தாரோ......

மனச்சாட்சி:- நீ அவனிடம் சென்று, அப்பணத்தைக் கொடுக்கும் போது. அவன் உன்னைப்போற்றி, உன்மேல் இரங்கி, உன் பசிக்கு காசு கொடுப்பானல்லவா?

மனம்:- ஏன்? அதைக் கொடுக்கும்போது, அவர் அதை வாங்கிவிட்டு, ''நன்றி'' என்று சொல்லிவிட்டால், என் நிலைமை......

மனச்சாட்சி:- ''நீதியின்படி நட நேர்மையுடன் வாழ், உண்மைபேசு, உத்தமனுய் வாழ்வாய்''! வெற்றி உனக்கே!

அருள் அமலன்
நாவாந்துறை.

---

## ஓ அந்த உள்ளங்கள்

* சீர் குலைந்த வாழ்க்கையினை
சீர்ப்படுத்தும் உள்ளங்கள்
வாழ்விழந்த மானிடர்க்கு
வாழ்வளிக்கும் உள்ளங்கள்

* ஒளியில்லா நாட்டிற்கு
ஒளி வழங்கும் உள்ளங்கள்
வழியில்லா மக்களுக்கு
வழிசமைக்கும் உள்ளங்கள்

* கறைபட்ட வாழ்விற்கு
கறை அகற்றும் உள்ளங்கள்
குறையுள்ள வாழ்விற்கு
குறைபோக்கும் உள்ளங்கள்

• நானென்ற அகந்தையை
நாடாத உள்ளங்கள்
யாமென எண்ணியே
வாழ்ந்திடும் உள்ளங்கள்

M. M. நிக்ஸன்

---




## சீதனக் கொடுமை

''திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது'' என்பர். தன் பையனுக்குத் திருமணம் முடிக்க வேண்டுமென பெண்ணைத் தேடுகிருர் ஒருவர். சில சமயம் பல இடங்களில் இருந்தும் பெண்வீட்டார்கள் வருகின்றனர். சீதனம் யார் அதிகமாகக் கொடுக்கிருர்களோ அப்பெண்ணைத் தனது பையனுக்கு மணம் முடித்து வைக்கிருர் அப்பெண்ணின் குடும்பம், குலம், குணம் இவற்றைப் பற்றி சிறிதும் சிந்தியாமல் பணத்தைத் தான் பெரிதாக எண்ணுகிருர்.

பெண்ணைவிட ஆண் மேலானவனும் அல்லன், ஆணைவிட பெண் மேலானவளும் அல்ல. இருவரும் சரிசமமாக இருக்கிருர்கள். ஆதாமைப் படைத்த இறைவன் அவனுக்குத் துணையாக ஏவாளைப் படைத்தார். ஆதாமின் கால் எலும்பிலிருந்தோ, தலையிலிருந்தோ. முதல் பெண்ணை உண்டாக்கவில்லை. ஆதாமின் விலா எலும்பு ஒன்றை எடுத்து அதிலிருந்து அவளை உருவாக்கினுர். இதனுல் இருவரும் சரிசமமானவர். திருச்சபையும் பெண்களுக்கு சமஉரிமை கொடுக்கிறது. ஆனுல் இன்றைய சமுதாயத்தில் பெண்ணின் குடும்பப் பெருமையை உணராது. அன்பைப் பாராது. ஏதோ பணம் தரும் ஜடப்பொருளாக எண்ணி, அப்பெண்ணின் பெருமையை அறியாமல் சீதனம் வாங்குகிருர்கள்.

தன் பிள்ளைக்குத் திருமணம் முடிப்பதற்காக ஒருவன் தனது வீடு, நிலம் அனைத்தையும் அடகுவைக்கின்ருன் இன்னும் சிலர் அதை விற்றுவிடுகிருர்கள். மற்றும், பலர் திருமணத்திற்காக வட்டிக்குப் பணம் தருபவரிடமும், வங்கி மூலமும் பெறுகிருர்கள். தான் கொண்ட கடனை வட்டியும் சேர்த்து அடைக்க முடியாமல் சிலர் ஏங்கித் தவிப்பதைக் காண்கிறோம். செழித்து வாழவேண்டிய குடும்பம் அமைதியின்மையால் நிம்மதியற்று, சண்டைச் சச்சரவு கொண்ட குடும்பமாக மாறுவதை நாம் காண முடிகிறது.

சமாதானம் நிலவ வேண்டிய குடும்பம் நெருப்பாக மாறுகிறது, ஆண் பிள்ளை பிறந்தால் மகிழ்வு கொள்ளும் ஒருவன், பெண் பிள்ளை பிறந்தால் கவலை கொள்கிருன். பாரச்சுமையாகக் கருதுகிருன்.

ஆகையால் திருமணம் செய்து கொள்ளப்போகும் வாலிபர்கள் தாங்கள் சீதனம் வாங்குவதில்லை என்று சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சில இடங்களில் சிலர் சபதம் எடுத்துக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

சீதனம் திருமணத்திற்கு முன்பாகவும், திருமணத்திற்குப் பின்னும் தீமையை விளைவிக்கிறது. ''நகை குறைவாகப் போட்டிருக்கிருர்கள், பாக்கி நகையை வாங்கிவா'' - என மனைவியை அவளது பிறந்த வீட்டிற்கு ஒரு சிலர் அனுப்புவதைப் பார்க்கிறோம்.

ஒரு சிலர் சீதனம் பாக்கிப் பணத்தை திருமணத்திற்குப் பின் தருவதாகக் கூறி காலம் கடத்துவதிலுைம் அக்குடும்பங்களில் குழப்பம் உண்டாகிறது.

அமைதியாக, பண்பாக, இனியவளாக, பாசமுடையவளாக மனைவி இருந்தாலும் சீதனம் என்னும் பேயால் மனைவி வேண்டா நபராகக் கருதப்படுகிருள். கணவனுலோ, மாமன் மாமியாராலோ கொடுமைப்படுத்தப்படுகிருள். எனவே இல்லத்தில் நிம்மதி இல்லை. அமைதி இல்லை, அமைதியில்லாத, அன்பு இல்லாத இல்லத்திலே பண்பு வருமா?

எனவே கோயில்களிலும், கல்லூரிகளிலும் இன்னும் வாலிபர்களிடமும் சீதனத்தின் தீமையைப் பற்றி எடுத்துக்கூறி அவர்களிடம் இனிமேல் சீதனம் வாங்குவதில்லை எனச் சபதம் எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டும். அப்போதுதான் வீடும், ஊரும், நாடும், உலகமும் முன்னேறும். சீரும் சிறப்பும் கொண்டதாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
க. ப. இல. 2.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர் - 16

### மிக்கேயாஸ் - 1

மீசகா என்ற பெயர் "மீக்காயாஹூ" என்ற சொல்லின் சுருக்கமாகும் இதன் பொருள் "ஆண்டவருக்கு நிகர் யார்"? என்பதாகும். மீக்கா என்றபெயரை கிரேக்க மொழி பெயர்ப்பான எழுபதின்மர் நூல் (செப்துவாஜிந்ற) மிக்கேயாஸ் என்று அழைக்கின்றது.

மீசகா யூதா நாட்டிலுள்ள மோரேசேத் என்ற நாட்டுப்புறக்கிராமத்தில் தோன்றினார். இக்கிராமம் அந்நியர் படையெடுப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டது. மீக்காவும் பாதிக்கப்பட்டிருக்கலாம். மீக்காவின வாழ்க்கையையும், அவர் இறைவாக்குப்பணிக்கு அழைக்கப்படுதல் பற்றியும் அதிகம் தெரியவில்லை இவர் ஆமோசைப்போல் ஒரு சாதாரண கிராமவாசியாக இருந்திருக்கவேண்டும். நாட்டுப்புறத்தில் துன்புறும் மனிதனின் நோக்கில் நாட்டின் அவல நிலையை சமய, சமூகத்தின் முறைகேடுகளை எடுத்துக் கூறிக்கண்டனம் செய்கிறார்.

மீக்கா தனது வாழ்க்கையைப் பற்றியோ, அழைத்தலைப் பற்றியோ எக்குறிப்பையும் கொடுக்காவிட்டாலும் தன்னைப் பற்றி இருமுறை பேசுகிறார் "யாக்கோபுக்கு அதன் அக்கிரமத்தையும, இஸ்ராயேலுக்கு அதன் பாவத்தையும எடுத்துக் காட்ட நான் வல்லமையாலும் ஆண்டவரின் ஆவியாலும் நீதியாலும் ஆற்றலாலும் நிரப்பப்பட்டுள்ளேன்" (3:8)

"நானோ ஆண்டவரையே நோக்கியிருப்பேன், எனக்கு மீட்பளிக்கும் கடவுளுக்குக் காத்திருப்பேன். என் கடவுள் எனக்குச் செவிசாய்ப்பார்" (7:7)

இந்த இரு சுய வரலாற்றுக் குறிப்புகள் மீக்காவின் மன உறுதி மிக்க ஆற்றல் மிக்க ஆட்தன்மையைக் காட்டுகின்றன. இறைவாக்குரைக்கத் தம்மை இறைவன் அழைத்துள்ளார் என்று மீக்கா உறுதியாக உணர்ந்தார் என்பதையும் அதன் விளைவாக அச்சமில்லாது இறைவாக்குரைத்தார் என்பதையும் காட்டுகின்றன.

கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 70

## தகனப்பலி

பலிகொடுக்க கொண்டுவரப்படும் பலிப்பொருள் முற்றிலும் எரிக்கப்பட்டு ஒப்புக்கொடுக்கப்பட்ட பலியே தகனப்பலியென அழைக்கப்பட்டது பலி கொடுக்க வருபவர் பலிமிருகத்தை ஆலயத்தின் புறமுற்றத்திற்கு கொண்டு வருவார். அதை குரு சோதித்துப் பார்ப்பார். பின் பலிப்பொருள் மேல் கை விரித்தல் நடைபெறும் • பலிமிருகத்தின் தலையின் மேல் தன் கையை வைக்கக்கடவான்" (லேவி 1 4) பலி கொடுத்தவர் கை விரித்தபின் குரு அதன் மேல் கைவிரிப்பார் இதற்குப் பல பொருளுண்டு. து காணிக்கை கொடுப்பதையம், மனிதன் காணிக்கைப் பொருள் மேல் தனக்குள்ள உரிமையை கைவிட்டு இறைவனிடம் முழுவதும் சரணபுகுவதைக் குறிக்கும்.

கைவிரித்தலின் பின் பலிமிருகம் கொல்லப்படும் மிருகத்தைக் கொல்வது குருவின்வேலையல்ல. பலி கொடுப்பவர் (லேவி 3:2 ) அல்லது இதற்கென உள்ள ஆட்கள் இதைச் செய்வர். அப்போது குரு இரத்தத்தை ஒரு கலத்தில் எடுதது பலிப்பீடத்தின் மேலும் ஆட்கள மேலும் தெளிப்பார். (லேவி 1:5 ) இரத்தத்தை உயிரின் அடிப்படையென இஸ்ராயேல் மக்கள் எண்ணினர். ஆகவே தான் இரத்தமே தடிக்கக் கூடாது இறைவனுக்கு மட்டுமே அது ஒப்புக் கொடுக்கபபட வேண்டும். (லேவி 17:1 ) இஸ்ராயேலின் பலி வழிபாட்டில் இரததம பகாரம் ஒப்பரவு ஆகிய ன்னதமான பொருளையும் பறுகிறது.

இரத்தம் தெளிக்கும் சடங்கு இறைவனையும் மனிதனையும் இணைப்பதையே உணர்த்துகிறது. இரத்தம் தெளிக்கப்பட்டபின் கொல்லப்பட்ட பலிமிருகம துண்டுதுண்டாக வெட்டப்பட்டு என்றும் எரிந்து கொண்டிருக்கும தகனபபலிப் பீடத்தில எரிக்கப்படும் இத்தகனப்பலி காலையும் மாலையும் நடைபெறும் மனிதன் தன்னை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணமாக்கும் ஆவலை இது காட்டுகிறது. பலிப்பொருள் எரிக்கப்படும போது மேல் நோக்கிச் செல்லும் புகை போல தானும் இறைவனை நோக்கித்தாவ வேண்டும் என்ற கருத்தையும இது தருகிறது.

தகனப்பலியில் பலி மிருகம் முழுவதும் எரிக்கப்பட்டது. சில வேளையில் அதில் ஒரு பகுதி குருவுக்காகவோ பலியிடுபவனுக்காகவோ தனியாக எடுத்து வைக்கப்படும். மிகுதி எரிக்கப்பட்டது. எடுத்து வைக்கப்பட்ட பகுதி பலியுணவு விருந்தில் பயன்படுத்தப்பட்டது.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

வாசக நேயர்களே!

நமது இறைவன் நமது மனத்திற்கும் முகத்திற்கும் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கின்றார் எமது மனத்தில் கவலையோ- மனச்சஞ்சலங்களோ, மகிழ்ச்சியோ தோன்றிவிட்டால் அது தன் உள்ளக் கிடக்கையை தனக்குள்ளே அடக்கி வைத்திருப்பதில்லை ஆகவே தான் நாம் ஒருவரைப் பார்த்து "என் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்? உனக்கு என்ன அச்சு?" என்று வினவுகின்றோம் அவர் அதை பூசி மெழுக முற்பட்டாலும் தன் முகத்திரையை மூடி மறைக்க அவரால் முடியாமல் போகிறது

இதைத்தான் திருநூல் ஆசிரியர் 15/13 ல் "இதயத்தில் உள்ள மகிழ்ச்சி முகத்தில் தெரியும்! மனச்சஞ்சலம் ஆன்மாவை வதைக்கும்- மனச்சஞ்சலத்தில் ஆன்மா குன்றிப் போகின்றது" என்று தெளிவாகநாடிபிடித்துப்பார்க்கிறார்.

நம் முன்னோரும் தம் முதுமொழியிலே

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்- குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்று தெட்டத்தெளிவாக விபரிக்கிறார்.

இன்னொன்றுசொல்லட்டுமா?

ஒரு பேரறிஞர் சொல்லுகிறார் "சும்மா இராதே! எதையாவது படி- ஏதோ ஒன்றைச் சிந்தி- ஏதாவது ஒன்றை எழுது! இது உனக்கு மட்டுமல்ல- உலகத்துக்கும் உதவும்" என்கிறார். நமது வாழ்வை வீணிலே நாம் செல்வழிக்கின்றோம். அல்லது தூக்கத்திலே செலவழிக்கின்றோம்! இறைவன் மனிதனைப்படைத்தது? படைக்க- பராமரிக்க- விருத்தி செய்ய! வாழ்வது கொஞ்ச நாளாயினும்- வந்து உதித்த நோக்கத்தை வரையறை செய்ய வேண்டுமல்லவா?

திருநூல் தெளிவாக எம்மை எப் வாழ்வை சுட்டிக்காட்டுகிறது. 15/19 ல் "சோம்பேறிகளுடைய வழி முள்வேலி போலாம் நீதிமான்களுடைய பாதை இடறல் இல்லாததாம"

விடாப்பிடியாக நம் முன்னோர் பதிலுரை கொடுக்கின்றார் இப்படி. "துணிந்தவனுக்கு தூக்கமில்லை அருண்டவன் கண்களுக்கு- இருண்டதெல்லாம பேய்"!

உண்மை தானே!

தாகக்க வெளிக்கிட்டவன் தயங்க மாட்டான்! தயங்கி நிற்பவன் எதிலுமே அச்சம்கொள்வான!

இன்று எம மத்தியிலும் உள்ள சீர்கேடுகள் இவைகள் தானே! சிந்தியுங்களேன்!

மறமொழி!

இன்றைய காலகட்டத்திலே எதையுமே உடனே செய்து முடிக்கவேண்டும்! உடனடித் தீர்ப்பு வேண்டும்! எதையும் சட்டுப் புட்டென்று முடித்து விடவேண்டும்- என்ற அவசர புத்திக்காரர்கள் நாங்கள்!

### வாரம் ஒரு சிந்தனை

"இறைவன் எல்லோர் இதயங்களிலும் வாழ்கிறார்- ஆனால், எல்லா இதயங்களும் இறைவனை ஏற்பதில்லை."

உங்கள் அன்பன்
எஸ். ஏ நாதர்

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 11 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை

கடவுளின் அரசு இதோ!
உங்களிடையே உள்ளது.

லூக். 17: 20 — 21.

நன்றி நன்றி.

காவலன் கண்மணிகள் ஆசிரியர் அவர்களுக்கு.

'விவிலியமும் திருக்குறளும்' என்னும் புத்தகத்தின் இரு பாகங்களையும், தாவீதடிகள் பற்றிய புத்தகமொன்றையும் புனித வளன் அச்சகத்தில் 10-2-89 இல் பெற்றுக்கொண்டேன். உங்களுக்கு எனது நன்றிகள்.

இப்படிக்கு
காவமன் கண்மணி
ஞா. மேரி மாலதி
அங். எண். 48.

* * *

### தொண்டன்

(நாடகம்:)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சின்: இந்த நாளைப் பரிசுத்தமாக அனுசரித்தால் என்ன? குறைஞ்சா போவாய்?

மோகன்: அப்பா! பெரிய வியாழன் வருசம் வருசமாக வரும். சனங்கள் ஆலயத்துக்கு அள்ளுப்பட்டுப் போகும். அங்கு போய் என்னத்தைக் கண்டார்கள்? கோயிலுக்குப் போகாத என்னைப் பேசிறிங்க. கோயிலுக்குப் போறவையள் பெரிய திறமா?

சின்: மோகன்! கற்கக் கற்க அடக்கம் வரவேண்டும். அடுத்தவன் குறையைக் காட்டி நம் குற்றங்களை மறைக்கப் பார்க்கக் கூடாது.

மோ: அப்பா! ரவி என்னைப் பார்த்துக் கொண்டிருப்பான். நான் வாறன்.

சின்: மோகன்! கொஞ்சம் நில். நீ கலந்துகொள்ள இருப்பது ஒரு நண்பனின் விழா நான் போகச் சொல்வதோ! எம் தலவரின் தியாக வேள்விக்கு உலகெல்லாம் புனிதமாக நினைக்கும் இப்புண்ணிய நாளை கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ளும் நீ! ஆடலிலும் பாடலிலும் களிக்க நினைத்தால் அதைத்தடுக்க நான் விரும்பவில்லை.

மோ அப்ப, என்னை என்ன செய்யச் சொல்றீங்க.

சின்: உனக்கு நான் என்னத்தைச் சொல்ல இன்று நீ நடந்து கொள்ளும் முறை நாளை உன் பின் வரும் சிறுசுகளுக்கு ஒரு வழிகாட்டலாக அமையும். ஏன் உன் தங்கைக்கு! உன் பிறசமய நண்பர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் (சின்னப்பரைத் தொட்ட யேசு இவனையும் தொடாமலா போவார் என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.)

மோகன் சிறிது தயங்கி நின்றான்
சைக்கிலை எடுத்துக் கொண்டு விரைந்தான்.

(அடுத்த சுடரில் தொடரும்)

### சிந்திக்க சில வரிகள்... ...

★ குழப்பம் மலிந்த நவீன உலகில் நீ
குழம்பாமல் வாழ்வதுதான் சிறந்தது!

★ மனிதனை மனிதனக வாழ வைக்கின்ற எந்தவொரு
மனிதனும் புனிதனகவே வாழ்கின்றான்!

★ இறைவனது ஒளியைத் தெரிந்து கொண்டவனை
உலக மாய வலைக்குள் விழுத்த முடியாது.

M. ஜோன் பற்றிக்
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனருவி

குருத்து ஞாயிறு (19-3-89)

## முரண்பாட்டு முடிச்சு நானுமா?

மகிழ்ச்சியும், துயரமும் மாறி வரும் நிகழ்ச்சிகள் அடங்கிய வழிபாடுகள் குருத்து ஞாயிறு வழிபாடுகளாகும். இயேசு ஜெருசலேம் நகரை நோக்கி வழிநடக்கிறார் பாஸ்கு விழாவில் கலந்துகொள்ள பல முறை ஜெருசலேம் ஆலயத்திற்குச் சென்றிருப்பார். ஆனால் இம்முறை பாஸ்கு விழாவை ஒரு கடந்த கால வரலாற்று நிகழ்வாக நினைவு கூரவல்ல; மாறாக, தம் வாழ்வாக வடிக்கச் செல்கிறார்.

வருடா வருடம் பாஸ்கு வாரம் வந்துபோகிறது. இவ்வாரத்தில் எம்மில் பலர் உணர்ச்சிவசப் படுகிறோம். ஆனால் உண்மைகளை உணர மறுக்கிறோமே. இறைமகன் இயேசு பவனி வருகிறார் என்று காணும் மக்கள் கூட்டம் ஓசான்னா பாடினார்கள்; வாழ்க வாழ்க என்று வாழ்த்தினார்கள்; போர்வைகளை வழியில் விரித்து வரவேற்றார்கள். ஆனால் அந்த கூட்டம் தங்கள் உயிரைக் காக்க ஓட்டம் எடுப்பார்கள் என்று நம்பமுடியுமா? அதே நாவுகள் ஒழிக, ஒழிக என்று நஞ்சைக் கக்குமென நம்பமுடியுமா? மனிதன் முரண்பாட்டின் ஒரு முடிச்சாகி விட்டானே. அவனது உள்ளத்திற்கும்—நாவுக்கும், அவனது பேச்சுக்கும் — நடத்தைக்கும், ஒரு கணத்திற்கும்—மறுகணத்திற்கு மிடையே முளைத்திடும் முரண்பாடுகள் எத்தனை, எத்தனை. அவனாலேயே நம்ப முடியவில்லை.

மக்கள் இயேசுவின் புதுமைகளைப் பார்த்து உணர்ச்சிவசப் பட்டார்களே ஒழிய புதுமைகளை அருங்குறிகளாகப் பார்க்கவில்லை. தோற்றங்களின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டார்கள் அர்த்தங்களின் ஆழத்தை உணர மறுத்துவிட்டார்கள். அதனால் கூட்டத்தோடு கோசமெழுப்பினார்கள். தம் மெசியாவை; அதிகாரம், அழிப்பு, பதவி பலம் என்ற ஆசனங்களில் அமர்த்த விரும்பினார்கள்

ஆனால் இயேசு தம் ஆட்சி அமைதியின் அரசாட்சி. அங்கு தாழ்ச்சி, தியாகம், மன்னிப்பு, கையளிப்பு என்ற நாற்காலிகளைக் காட்டினார், அவை மக்களுக்கும், அவரது சீடர்களுக்கும் கூட ஓர் இருட்டறையாகத்தான் தென்பட்டது. அதனால் இயேசுவை:

பழி சுமத்தினர்கள்.
மறுதலித்தார்கள்.
காட்டிக் கொடுத்தார்கள்.
விட்டு ஓட்டம் எடுத்தார்கள்.
துன்புறுத்தினர்கள்.
கொலை செய்தார்கள்.

பரிசுத்த வாரத்தில் எம்மில் பொங்கியெழும் உணர்ச்சிகள் வெறும் பாசாங்குதானா? அன்றேல் அவை எமது உள்ளத்தின் வெளிப்பாடுதானா? வழிபாட்டில் கொள்ளும் வாழ்த்துக்கள், போற்றுதல்கள், சமாதான, சகோதரத்துவ அடையாளங்கள் எம் வாழ்வில் நடைமுறைப்படுத்தக் கூடியவையா?

பாஸ்கு வாரச் சடங்குகள் வாழ்க்கையை வேறுபடுத்தும் முரண்பாட்டு நிகழ்ச்சிகளாகக் கூடாது. இயேசுவுடன் வழி நடந்த உணர்ச்சிவசப்பட்ட கூட்டமாகச் செல்லாது; சுயமாகச் சிந்தித்து அவரது வாழ்வில் இருந்து எம்மை எந்தச் சக்தியும் பிரிக்காது என்ற திடமனதோடு வழிநடப்போம். அன்று மக்கள் ஓர் நாள் வாழ்க, மறுநாள் ஒழிக என்று தாம் சொல்வது, செய்வது அறியாமல் முரண்பட்டார்கள். ஆனால் இன்று நாம் செயல்பட வேண்டிய முறைவேறு. இயேசுவின் பாஸ்கா அனுபவத்தை எம்மில் தொடர நாம் எடுக்கும் ஒரு தாழ்மையான முயற்சிதான் பாஸ்கு வாரம்.

இயேசுவைப் புகழ்வதற்கு மட்டுமல்ல, "ஆண்டவரே உம்மோடு, சிறைக்கும், சாவுக்கும் உள்ளாக ஆயத்தமாய் இருக்கிறேன்" (லூக். 22: 23)

என்று இயேசுவுடன் ஒன்றித்த வாழ்வுக்கு எம்மைக் கையளிப்போமா?

★ ★

உயிர்ப்பு ஞாயிறு (26-03-79)

## அனுபவம் புதுமை

எம் நாட்டில் நாள் ஒன்றிற்கு சராசரி இருபதிற்குக் குறையாமல் கொலைகள் இடம்பெறுகின்றன. சித்திரவதையும், கொள்ளைகளும், இழப்புக்களும் ஏமாற்றங்களும் அதிர்ச்சியும், அச்சமும் மக்களை இறப்பு அனுபவத்திற்குத் தூக்கிச் செல்லுகின்றன. மரண ஓலங்கள் வாழ்க்கையின் அமைதியைக் குலைத்து விடுகின்றன. இயேசுவின் இவ்வுலக வாழ்வின் இறுதிக்காலத்தில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளும் இந்நாட்களில் மீண்டும் நடைபெறுவது போல உணருகின்றோம்.

இயேசுவின் மரணம் அவரது மனத்தில் வளர்த்த வேதனை ஒருபுறம்; அவரையே நம்பி, அவரிலேயே தங்கி வாழ்ந்த சீடர்களது மனங்களில் ஏற்படுத்திய தாக்கம் இன்னொருபுறம். தமது தொழில், சொத்துக்கள், குடும்பம் போன்ற வாழ்வின் அடிப்படை உரிமைகளையே துறந்து இயேசுவைக் குருவாக, ஆண்டவராகக் கொண்டவர்கள் அவரது சீடர்கள். அவர்களது உள்ளங்களில் தம் எதிர்காலம் பற்றி கட்டியெழுப்பிய கோட்டைகள் எல்லாம் ஓர் இரு நாட்களில் தரைமட்டமாக்கப்பட்டது போன்ற எண்ணம் எழுந்தது. இயேசுவின் பாடுகளும் மரணமும் புரியாத மறைபொருளாக விளங்கிற்று. அதிகாரமும், அவர்களோடு திரண்டு எழுந்த மக்கள் கூட்டமும் சீடர்கள் மனதில் அதிர்ச்சியையும், அச்சத்தையும் எழுப்பியது.

இந்நிலையில் இயேசுவின் உயர்ப்புச் செய்தி அவர்கள் காதுகளை எட்டுகிறது. அதுவும் பெண்களிடம் இருந்து வரும் அச்செய்தியை நம்பவே முடியவில்லை. கல்லறைக்கு ஓடினும் உயிர்த்த இயேசுவைக் காணவில்லை. "வெறுமையான கல்லறையைத்தான் கண்டனர். ஆயினும் விசுவசித்தார்கள்.

விசுவாசத்தின் வெளிச்சத்தில் வாழ்வைப் பார்க்க ஆரம்பித்தார்கள். மறைபொருளாய் இருந்த பல நிகழ்வுகளும், இயேசுவின் வார்த்தைகளும் புதிய அர்த்தம் பெறத் தொடங்கின. இயேசுவின் உயிர்ப்பை இயேசுவின் பல காட்சிகள் உறுதிப்படுத்தின. ஆனாலும் அவை விசுவாசம் என்ற திரையில் இடம் பெற்ற காட்சிகளேயாகும்.

விசுவாசம் என்பது ஒரு கொடை, இறைவனின் மகத்தான செயல்களை இனம் கண்டு கொள்ளும் ஒரு வகை ஆற்றலாகும்.

அது வாழ்வில் நிகழும் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளுடாக இறைவன் வழிநடத்தும் உயிர்ப்பு — இலக்கைக் கண்டு கொள்ளும் ஒருவகை ஊடகமாகும்.

விசுவாச ஒளியில் துன்பங்கள், வேதனைகள், இழப்புக்கள், ஏமாற்றங்கள் மொத்தத்தில் அனைத்து மரண — அனுபவங்களும் உயிர்ப்பின் ஏணிப் படிகளாய் அமைகின்றன.

கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு கொள்ளுதல் என்பது எம் வாழ்வின் இறுதியில் மரணத்தின் பின்புதான் என்று நினைப்பது தவறு. உண்மையில் அது ஒரு நிகழ்கால அனுபவம். கிறிஸ்து என்னில் செயலாற்ற என்னை நான் அவருக்குக் கையளிக்க வேண்டும். அக்கையளிப்பில் விசுவாசம் வளர மிளிரத் தொடங்குகிறது.

அன்றிலிருந்து என் மனநிலை, நோக்கு, பேச்சு, நடத்தை, விருப்புக்கள் உணர்வுகள் அனைத்தும் புதிய ஒளி பெறத் தொடங்குகின்றன. இவ்வுயிர்ப்பு அனுபவம் எங்கள் ஒவ்வொருவருடைய அனுபவமாகிட ஒருவர் ஒருவரை வாழ்த்துவோம். அல்லேலூயா.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

## சாவை வென்ற மாபரன்

அன்று கொலைவெறி பிடித்த யூதத்தலைவர்கள் கிறிஸ்துவைச் சிலுவைச் சாவுக்குத் தீர்ப்பிட்டனர். அதன் விளைவு மரியாளின் வயிற்றில் விளைந்த முத்து உயிரற்ற உடலாக, கிழிந்த நாராக சிலுவையில் தொங்கியது. தலைமைக் குருக்களோ தங்கள் எண்ணம் நிறைவேறிய தால் தாம் வெற்றி பெற்று விட்டதாக இறுமாந்திருந்தனர், பாவம் ……… தங்கள் இறுமாப்பு, கிறிஸ்துவின் உயிர்ப்பால் தகர்த்தெறியப் படும் என்று அப்போது அந்த அறிவிலிகள் உணரவில்லைப் போலும்.

மறுநாள் யூதர்களின் முக்கிய விழாவான பாஸ்காப் பண்டிகையாக இருந்ததால் கிறிஸ்துவின் உடலை அரிமத்தியா ஊர் சூசையும், நிக்கோதேமுவும் தகுந்த முறைப்படி அடக்கம் செய்தனர், பெரிய சனிக்கிழமை ஒவ்வொரு மணித்தியாலமாகக் கடந்து நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. எங்கும் ஓரே நிசப்தம் …… பயங்கர அமைதி … ஆனால் நேரமாக ஆக இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு எழுந்த அந்த ஒலி என்ன? ஆம், பலத்த சத்தத்துடன், கல்லறை திறந்தது, காரிருள் மறைந்தது.

உயிர்த்தார்மாபரன்கிறிஸ்து, சாவை வென்றார் மாவீரன். சாவை மட்டுமா வென்றார் யேசு? இல்லவே இல்லை, பாவத்தை வென்றார், இருளை வென்றார், அலகையின் ஆட்சியை முறியடித்தார், அதனால் அழிவற்ற செல்வமாகிய மீட்பை எமக்குப் பெற்றுக் கொடுத்தார்.

பழைய ஏற்பாட்டில் இறைவன் மோயீசன் வழியாக இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தளையிலிருந்து மீட்டதை நினைவு கூர்ந்து அவர்கள் அன்று நன்றிப் பெருக்குடன் பாஸ்காவைக் கொண்டாடினார்கள், நாமும் கிறிஸ்து தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக எம்மை மீட்டதை நினைவு கூர்ந்து இன்று இப்புதிய பாஸ்காவைத் தகுந்த விதத்தில் கொண்டாடுவோமாக!

## தாகம் தீர்ப்பாயா ?

தலை சாய்த்து உயிர் போகும் தருணத்தில்
தாகமாயிருக்கிறேன் என்றுரைத்தேன்
தளராத பாசமென்னில் தாகமென
தலை தூக்கும் காரணம் நான் சொல்லுகிறேன்.

தன்வழியாய் தந்தை வழி தினம் நடந்து
தவறுகின்ற உள்ளங்களில் குடி புகுந்து
நல்வழியில் நானிலத்தில் வாழ்ந்திடவே
ஞானப் பாலூட்டும் நல்லுள்ளத்திற்கே
தாகமாயிருக்கிறேன் தீர்ப்பாயோ நீ ?

பசியால் துடிக்கிறேன் பலர் வடிவில்
பால் சோறுண்கிறாய் பார்த்திருக்க
வியாதி வந்து வீழ்ந்திருந்தேன் வீதியிலே.
வேடிக்கை பார்த்தென்னைப் பரிகசித்தாய்
காப்பாற்ற சென்ற என்னை சிறையிலிட்டே
வையகத்தில் வஞ்சகனை வாழ்த்துகிறாய்,
பாரில் இப்பாகுபாடு பறக்கும் வரை
பாசம் என்னில் மறைந்திடுமோ நீயேசொல்

பாசக்கரம் நீட்டி பாரில் நல்வழி காட்டும்
பாசமுள்ள உள்ளம் காண தாகமாயிருக்கிறேன் !
கரம் நீட்டிக் காப்பாற்றும் கருணை உள்ளம்
காணத் துடிக்கின்றேன் காணவில்லை.
கர்த்தர் என் பணி தொடர களிப்புடன் நீ வருவாயோ !
காலைக் கதிரவனாய் இருள் களைய வருவாயோ !
தாகம் தீர்த்தெனக்கு நிம்மதி நீ தருவாயா !

A. J. அல்வின்
திராட்சையூர்,
இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கொலைக் களத்தில் கலங்காத அன்னை"

"யெருசலேம் மகளிரே எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவுமே அழுங்கள்" (லூக். 23 : 28)

அன்று விடுதலை வீரன் இயேசுவின் மரண வேதனைகளைக் கண்ணுற்று, தாங்க முடியாத துயரினால் இயேசுவைப் பார்த்து புலம்பிய யெருசலேம் அன்னையருக்கும், மகளிருக்கும் இயேசு கூறிய ஆறுதல் வாக்கு இது. ஆம் கள்வர்கள், கொலையர்கள், இவர்களுக்குக் கொடுக்கப்படும் அதே தண்டனையைத் தான் அன்றைய யூதரின் தலைமைச்சங்கம் உத்தமன் கிறிஸ்துவிற்கும் வழங்கியது அவமானத்தின் அடையாளமான சிலுவையைத் தன் தோளிலே வீரத்துடன் சுமந்து செல்கின்றார். இயேசு வீரத்தாய்க்குப் பிறந்த மகன் அல்லவா? "தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை"! என்பார்கள். அதுபோன்றே கிறிஸ்துவும் ஓர் வீரமகன்!

அதிக சுமையுடைய சிலுவையைத் தன் மென்மையான தோளில் சுமந்துகொண்டு கல்வாரிக் கொலைக்களத்தை அடைந்துவிட்டார். எங்கு பார்த்தாலும் ஆயுதமேந்திய படைவீரர்கள்! ஆனால் இதுவரை காலமும் இயேசுவிடம் நன்மைகள் பல பெற்றவர்கள், பார்வையடைந்தவர்கள், நோயிலிருந்து குணம் அடைந்தவர்கள், இயேசுவின் வழியாக சமுதாயத்திலே திரும்பவும் தங்களுக்கென்று ஒரு விடுதலை வாழ்வைப் பெற்றுக்கொண்டவர்கள் - இவர்களில் எவனையுமே அங்கு காணவில்லை ஆயுதப்படையினரின் நடைய எடுபிடிகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் பயந்து எல்லோரும் ஒதுங்கி விட்டார்கள். ஆனால் அந்தக் கொலைக்களத்தில் மரியன்னை காணப்படுகின்றாள்.

"சென்றுவா மகனே! வென்றுவா!" என வீர வெற்றி வாக்குரைத்து தம் தனயர்களைப் போர்க்களத்திற்கு அனுப்பும் அன்றைய வீரத்தாய்மார்களுக்கும் மேலான வீரத்தாயாக இங்கு இயேசுவின் அன்னை மிளிர்கின்றாள். அதாவது ஏக மகனையே கொலைக்களத்திற்கு அனுப்பிவிட்டு தான் மட்டும் வீட்டில் இருக்கவில்லை மாறாக மகன்படும் வேதனைகள், துன்பங்களில் தானும் பங்கெடுக்க அவரது இரத்தபாதச் சுவடுகளை அடியொற்றியவளாக அந்த அன்னை பின் தொடர்கின்றாள். தன் மகன்படும் வேதனைகளைக் கண்ணுற்று விழிகள் கலங்கி கண்ணீர் உதிர்ந்தபோதும், கலங்காத நெஞ்சுடையவளாகத் துணிந்து அக்கொலைக்களத்தில் நுழைகின்றாள் அன்னை மரியாள்!

இயேசுவை சிலுவையில் அறைகின்றார்கள். கொடிய யூதர்கள்! ஆவி துடிக்கும் இந்த வேளையில். பெற்ற அந்த அன்னையின் கமலக்கண்கள் இக்காட்சியைக் கண்ணுறும் நேரத்தில் அவளது மனவேதனையை யாரால்தான் விதந்துரைக்க முடியும்? அதைத்தான் சான்றோர் கூறுவர். "பெற்ற மனம் பித்து" என்று இந்த வேளையில் அந்த வீரத்தாயின் மனித உள்ளத்திலே உதர்ந்த எண்ணங்



களை யார் அறிவீர்? எனினும் இக்கொடூர வேதனையை இறையருளால் முன் கூட்டியே அறிந்த ஞானியான சிமியோனின் மெய்வாக்கான, "உமது உள்ளத்தையும் ஓர் வாள் ஊடுருவும்" என்ற வார்த்தை எமக்குப் புலப்படுத்தி நிற்கின்றது.

என் மகன் செய்த குற்றம் என்ன? முப்பத்துமூன்று வயதிலே இனிய இளமைப்பராயத்தை இன்பமாக அனுபவிக்க வேண்டியவன், திருமணமாம் நல் இல்லறத்தில் புகுந்து, பிள்ளைகளைப்பெற்று மகிழ்வாக வாழவேண்டியவன், ஆனால் சமுதாயத்தின் நல்வாழ்விற்காக, ஏன் அகில உலக விடுதலைக்காக இவற்றையெல்லாம் துறந்து தன்னையே மக்களுக்காக முழுமையாக அர்ப்பணித்தது என் மகன் செய்த குற்றமா? ஆலயத்தின் பெயரால் கடவுளின் நாமத்தினால் விதவைகளை வஞ்சித்து ஏழைகளை உறிஞ்சி, சொகுசுடன் வாழ்ந்து வந்த தலைமைக் குருக்கள் சென்ற வழி பிழையென்று கூறியது குற்றமா? சமூகத்தினால் எவரும் ஒதுக்கப்பட்டவர்களாக வாழக்கூடாது, அனைவரும் அவரவருக்குரிய சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்ற உயரிய நோக்கோடு ஏழைகளோடும், பாவிகளோடும், ஆயக்காரருடனும், சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டவர்களோடும் சரிநிகர் சமானமாகப் பந்தியமர்ந்து போஷனம் செய்தது குற்றமா?

இவ்வாறான பல்வேறுபட்ட கேள்விக் கணைகள் அன்பு அன்னையின் உள்ளத்தை உண்மையாக ஊடுருவி இருக்கும். என்றாலும் படைவீரர்களுக்கு அஞ்சாது இயேசுவின் சிலுவை அடியிலே துணிவோடு நிற்கின்றாள். இந்த அன்னை! மகனது மரணத்தோடு வரலாறு முடிவடைந்துவிடாது என்பது இந்த வீரத்தாய்க்கு நன்கு தெரிந்திருந்தது. மாறாக, இம்மரணம் மனுக்குலத்திற்கு விடுதலை வாழ்வு வழங்கும் விடிவெள்ளியாக இருக்கும் என்பதனையும் அன்னைமரி அறியாமல் இல்லை! இயேசு தமது போதனை வாழ்வில் கூறிய "கோதுமைமணி நிலத்தில் விழுந்து மடிந்தால் ஒழிய பலன்தர முடியாது" என்ற திருவாக்கினையும் மரியாள் தன்னுள்ளத்தில் மௌனமாகச் சிந்தித்திருக்க வேண்டும்.

கொலைக்களத்தில் தன் மகனின் நிஷ்டூர வேதனைகளைக் கண்ணுற்ற தாய்மனம்படும் வேதனைகளை யார் அறிந்திருப்பார்கள்? ஆனால் அந்த பெத்த மனமோ அனைத்துக்கவலைகள்' துன்பங்களையெல்லாம் உறுதியான தன் மனம் என்னும் சிலுவையில் சுமந்தவளாக, இயேசுவை பின் தொடர்கின்றாள். இந்த அவலங்களை எல்லாம் வேறு எந்தத் தாயாலும் கண்ணுற்றுத் துணிவுடன் வாழமுடியுமா?

தன் ஒரேயொரு மகன் வாழ வேண்டும். தனக்குப் பணம் சம்பாதித்து இறுதிவரை தன்னை வைத்துப் பராமரிக்க வேண்டுமென்று விரும்பினவளுமல்ல. மகனுக்கு அநியாயமாக மரணத் தீர்ப்பிடப்பட்ட பொழுது இந்தத் தீர்ப்பு அநீதியானது. எந்தக்குற்றமும் செய்யாத என் மகனுக்கு மரணத் தீர்ப்பா? வேண்டாம்! இந்தத் தீர்ப்பினை வாபஸ்பெறுங்கள் என்று ஆட்சியாளரிடம் மண்டியிட்டது கிடையாது. யாருக்காவது கும்பிடுபோட்டு அற்ப சொற்ப சலுகைகள் பெற்றதும் கிடையாது. ஏனெனில் அவள் இறைவனின் திட்டத்தை அறிந்து நிறைவேற்றியவள் அதுபோன்று மகனும் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றி வெற்றிபெறவேண்டும் என்று அன்னைமரியாள் அறிந்திருந்தமையால், தன் மகனின் செந்நீரினால் இப்பாவப்பூமி கழுவப்பட்டு புண்ணிய பூமியாக, விடுதலை வாழ்வின் அணையா தீபமாக ஒளிவீசவேண்டும் என்பதற்காகவும் மனுக்குலம் முழுவதும் இறைவனின் மாட்சிமையைக் காணவேண்டும் என்ற பரந்த நோக்கில் தனக்கு ஏற்பட்ட துயரங்கள் பத்தியிலும் பயமகற்றி வீரத்தாயாக, வாழ்க்கைப்பிரச்சனைகளைக் கண்டு கலங்காது இறைவனின் துணையுடன் எதிர் நீச்சல் போடக்கொல்கொத்தா நோக்கித் துணிவுடன் செல்கின்றாள் வீரமாதான மாதா மரியாள்!

செல்வி:- மேரிவுளோரன்ஸ்.
சூசைதாஸ்.
சென். ஜேம்ஸ்
இளவாலை.

## பாஸ்கா விழா விடுக்கும் அழைப்பு

இறைவனின் பாஸ்கா விழாவைக் கொண்டாடும் அன்பு உள்ளங்களே, 1989ம் ஆண்டுப் பாஸ்கா விழா ஊரோடு ஒத்து ஓடி, கும்பலோடு கும்பலாக, சடங்கு சம்பிரதாயங்கள் இம்மியளவும் விலகாது, ஒரு நாள் கூத்துப்போல மேடையேற்றத்துடன் நிற்பதா? அல்லது எமது உள்ள ஏற்றத்துடன் (மன ஏற்றத்துடன்) முழுநிறைவை அடைவதா?

சற்று நின்று ஆழமாக சிந்திப்போம். கிறிஸ்து ஏன் சிலுவை சுமந்தார்? சிலுவை என்பது என்ன? கிறிஸ்து ஏன் உயிர்த்தார்? உயிர்த்த கிறிஸ்து விடுக்கும் அழைப்பு என்ன?

அன்று இறைமகன் கிறிஸ்து, அலகையின் ஆதிக்கத்தில் கட்டுண்டு, வாழ்விலே ஒளியின்றி, இருளில் வாழ்ந்த மக்களுக்கு, அடிமை விலங்கு உடைத்து வாழ்விலே ஞானஒளியை ஏற்றி வைக்கும் விடுதலை வீரனைச் செயற்பட்டார். ஆனால் அன்றைய உலகின் தலைமைப்பீடங்களும் அவற்றின் சட்டதிட்டங்களும் அந்த உன்னத வீரனை மரணத்தீர்ப்பளித்து வழங்கிய தண்டனையால் சிலுவை சுமந்தார். நாமும் அந்தத் தலைமைப் பீடங்களின் முழுமையான உறுப்பினர்களாக வாழ்ந்தோம், இன்றும் வாழ்கிறோம். இனியும் வாழவேண்டுமா? சுமத்தப்பட்ட சிலுவை வெறும் காய்ந்த மரம்தான் ஆனால் அதற்குப் பழுவை ஏற்றியது. நமது பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண், மற்றும் உலக இன்பங்கள் தேடிய செயற்பாடுகளேயாகும். உலகில் எந்த மூலையில் ஏதும் நன்மையான காரியம் நடந்துவிட்டால் அதில் உள்ள நமது பங்கை ஊரறிய உலகறியத் தம்பட்டம் அடிக்கிறோம். இறைவனின் மீட்புத்திட்டத்தில் உள்ள நமது பங்கை நாம் ஏன் மூடிமறைக்கிறோம்? இறைமகனின் கொலைக்கு நாம் ஒவ்வொருவரும்தான் காரணம். ஆம் நாமே அவரைக் கொலை செய்தோம்.

ஆனால் அந்த உன்னத விடுதலை வீரன் சாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு தோற்றுப் போகவில்லை. தனது முழு உடலோடு உண்மை விடுதலையைப் பெற்றுத்தர அலகையின் இவ்வுலக அரசு நிலையற்றது. இறையரசு ஒன்றே நிலையானது என்பதை நிரூபிக்க உயிர்த்தெழுந்தார் உயிர்த்த கிறிஸ்து நாம் முழுமையான மனமாற்றம் அடைந்து ஒரு கன்னத்தில் அறைபவர்களுக்கு மறு கன்னத்தைக் காட்டி, உலக இன்பங்கள் யாவும் நிலையற்றன. இறையரசில் நாம் பெறும் இன்பங்கள் மட்டுமே நிலையானவை என்பதை ஏற்று தனது புதிய இறைகுலமாக வாழ அழைக்கிறார்.

அவர் அழைக்கும் பாதையில் எம்மை முழுமையாக அர்ப்பணித்து கிறிஸ்து தனது உயிர்ப்பின் வழியாகப் பெற்றுத் தந்த விடுதலையின் இன்ப சுகத்தைப் பெற்றுவாழ்வோம்.

அ. ஜெறின் யேசுராஜா
மடத்து வீதி
யாழ்ப்பாணம்.

## எம்மை மீட்டதன்றோ

தாவீது கோத்திரத்தின் தண்ணொளியே - உன்
தணியாத தாகம் தான் எம்மை மீட்டதன்றோ.

சேற்றினில் பிறந்த செந்தாரையே - உன்
செந்நீர் வியர்வைதான் எம்மை மீட்டதன்றோ.

பாவிகளை மீட்க வந்த பரம் பொருளே - உன்
பாரச் சிலுவைதான் எம்மை மீட்டதன்றோ.

அலகையை முறியடித்த அன்பனே - உன்
ஐந்திருக்காயம் தான் எம்மை மீட்டதன்றோ.

சிரசில் முள்முடி தரித்தவனே - உன்
சிலுவை மரணம் தான் எம்மை மீட்டதன்றோ.

உலகிற்கு ஒளியாய் வந்தவனே - உன்
உயிர்ப்பும் உத்தானமும் தான் எம்மை மீட்டதன்றோ.

செல்வி - றேகினி மத்தியாஸ்
சென்யேம்ஸ், வசாவிளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருட்டும் உயிர்ப்பு

‘‘மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்’’ என்ற அழைப்புடன் ஆரம்பித்த தபக்காலம் பரிசுத்த வார வழிபாடுகளுடன் நிறைவு பெறுகின்றது. வழிபாட்டுடன் தபக்காலம் முடிவடைகின்றதேயன்றி தபக்காலத்தின் செய்திகள் முடிவடைவதில்லை. மேலும், உயிர்த்த கிறிஸ்துவுடன் அனைத்து சிந்தனைகளும், கருத்துக்களும், வழிகாட்டல்களும். முன்மாதிரிகளும் உயிர் பெற்று, புதுத்தென்படைந்து வாழ்நாள் முழுவதற்கும்வேண்டிய சக்தியையும், உற்சாகத்தையும் அளிக்கின்றன. தபக்காலத்தில் புகுந்துவிட்ட நாம் சிறப்பு வழிபாடுகளிலும், சிலுவையின் சிந்தனைகளிலும், செப தப முயற்சிகளிலும், பரித்தியாகங்களிலும் ஈடுபட்டு இறுதியில் உயிர்ப்பு விழாவை கொண்டாட நுழைந்துள்ளோம்.

இறைமகன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா என்பது, ஆண்டாண்டு காலமாக மனுக்குலம் காணத்துடித்த விடுதலைப் பெருவிழா. ஒளியாகிய இறைவன் மனித உரு எடுத்து மானிடர் நம்மை ஒளியின் பாதையில் இட்டுச்சென்ற விழா. பாவப்பிடியில் கட்டுண்டு அல்லற்பட்ட மானிடர் நமது பாவக்கட்டை உடைத்த விழா, அறியாமையால் அநியாய தீர்ப்பிடும் எமக்கு ஆவியின் ஒளியை ஏற்றிய விழா, சட்டங்களும் சம்பிரதாயமுமே முக்கியம் என வாழ்ந்து, மனித மாண்புகளைப் போலிப் போக்குகளுக்காக அடி பணியவைத்த அனைவருக்கும் மனிதத்தன்மைகளும் மனித மதிப்பீடுகளுமே முக்கியம் என உணர்த்திய உன்னத விழா. இறைமகன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா.

உயிர்ப்பு விழாவுக்கு வெளி ஆடம்பரம் முக்கியமானதல்ல. மாறாக உயிர்ப்பு விழா தரும் செய்தியும், அதனால் கிடைக்கும் வழி நடத்துதலும் தான் முக்கியம் என்பதையுணர்ந்து, எம் உள்ளத்தில் உள்ள அடிமைத்தனங்களிலிருந்து உயிர்க்கும் கிறிஸ்துவுடன் நாமும் புதிய வாழ்வுக்கு உயிர்த்தெழுந்தால் மட்டுமே இவ்விழாவின் பயன் கிடைக்கும்.

மரணம் என்பது வாழ்க்கையிலே பயங்கரமான கவலைக்கிடமான, மாற்று வழி காண முடியாத ஒரு நிகழ்வாகும். அதை எவராலும் தட்டிக்கழிக்குமுடியாது. மானிடர் அனைவரும் மரணத்திற்குள் செல்லவும், இறுதித் தீர்ப்பின் பலாபலனைக் கண்டடையவும் வண்டுமென்பது இறைவனின் நியதி. எனவே மரணம்தான் வாழ்வின் முடிவு என்று எண்ணிவிட்டால் எம் விசுவாசம் எல்லாம் வீண். இதன்பொருட்டுத்தான் கிறிஸ்துவின் உத்தானம் கிறிஸ்தவத்தின் அடிப்படை உண்மையும் அடிக்கல்லுமாகும். கிறிஸ்து சாவை வென்ற சத்தியனாக மூன்றாம் நாள் உயிர்த்தெழவில்லையென்றால் இன்று கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களும் இருந்திருக்க முடியாது. எனவே தான் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து ஒவ்வொரு கிறிஸ்தனும் மறு உலக நம்பிக்கை கொண்டிருக்கின்றான். இவ்வுலக வாழ்க்கையில் அனுபவிக்கும் துன்ப துயரங்களில் வரவிருக்கும் நித்திய வாழ்வுதான் நம்பிக்கையையும். மனத்திடனையும் அளிக்கின்றது. கிறிஸ்துவும் வரவிருக்கும் இவ்வாழ்வையே போதித்தார் தம உத்தானத்தையே எம் நம்பிக்கையாக்கி இந் நம்பிக்கையின்படி வாழ அழைத்தார். எனவே எம் விசுவாசத்தை உறுதிப்படுத்தி நல் வாழவுதேட உண்மையுடன் உழைக்க வேண்டும்.

எம ஆதிப் பெற்றோர் இறைவனின் அன்பில் சந்தேகம் கொண்டதன் காரணமாக, தாங்களும் இறைவனைப் போல மாறவேண்டும் என்று பேராசை கொண்டதன் காரணமாக மானிடவாழ்வில் மாற்ற முடியாத நோயாக மரணம் ஆரம்பித்தது. அன்றிலிருந்து பாவம் மனிதர் அனைவரிலும் பரவி மரணமும், பாவமும் மானிட வாழ்வையே ஆட்டிப்படைக்க தொடங்கியது. பாவத்தின் கெடுபிடியால் அழிந்து போகும் மதுக்குலத்தை மீட்க இறைமகன் இயேசு பாவிகளின் தோழனாக அனாதைகளின் நண்பனாக வாக்களித்தபடியே மனுவுருவானார். பின்னர் எல்லா மனிதருக்கும் வாழ்வளிக்கும் விடுதலையை கொடுக்க, உலகின் உருவையே மாற்றியமைக்க, தன்னையே சிலுவைச் சாவுக்கு கையளித்து மரணத்தை வென்ற வெற்றி வீரனாய் சாவை வென்ற சத்தியனாய், மகிமை நிறை மன்னனாய் புத்துயிருடன் புதுவாழ்வு சமைக்க சாவில் இருந்து உயிர்த்தெழுந்தார் கிறிஸ்து.

எனவே பொருள் உணர்ந்த கிறிஸ்தவ வாழ்வை மேற்கொள்வோம். கருத்தை உணர்ந்த உயிர்ப்பைக்கண்டடைவோம். எம் வாழ்வில் இறைவனின் இனிய பிரதிநியாகத் திகழ்ந்து காட்டுவோம் ‘‘உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ் வான். ஒரு போதும் சாகான்’’ (அரு. 11:25) என்ற கிறிஸ்துவின் வாக்கில் நம்பிக்கை வைத்து நம்பிக்கையின் வாழ்வு வாழ விசுவாச வாழ்வு வாழ இறைவனின் உயிர்ப்பு உயிருட்டட்டும்.

அ. மோசேஸ்
தும்பளை
பருத்தித்துறை

## தூய மனம். இறைவனுக்குரிய தூய ஆலயம்

இறைவனால் வழங்கப்பட்ட இயற்கை செல்வங்களை அள்ளி அனுவவித்துக் கொண்டிருக்கும் நாம் வாழும் வாழ்க்கை உண்மையானதா? தூய்மையானதா? நாம் இக்காலத்தில் சற்று சிந்திப்போம். நாம் நம்மையும் நம்மைச் சுற்றி இருப்பவர்களையும்ஏதோ ஒரு விதத்தில் ஏமாற்றிக் கொண்டு தான் வாழ்கின்றோம் இதை மறுக்க முடியாது. பணத்திற்காக பதவிக்காக மற்றவர்களின் வாழ்க்கையை ஏதோ ஒரு விதத்தில் நசுக்குகின்றோம். ‘‘உன்னிடம் உள்ளவற்றை விற்று இல்லாதவர்களுக்கு கொடு இல்லாவிடில் மோட்ச இராட்சியத்தில் இடமில்லை’’ என யேசு திருவாய் மலர்தருளினார் இதை நாம் செய்கின்றோமா? யேசு சொத்தை விற்கச் சொன்னார் நாமோ நம்மிடம் மேலதிகமாக உள்ளதை நம் சகோதரனுக்கே கொடுக்க மறுக்கின்றோம். உள்ளவர்கள் கேட்கும் போது கொடுக்க நினைக்கும் நம் மனம் இல்லாதவர்கள் கேட்கும்போது மறுக்க நினைக்கின்றது. ஏன் நம்மிடம் தூய மனம் இல்லை. மற்றவர்களை வாழ வைக்கும் நல்ல பண்பு இல்லை எனவே கிறிஸ்தவர்கள் என நாம் பெருமைப்படுவதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை.

உள்ளதைக் கொடுத்து முடிந்ததைப் பகிர்ந்து தூய உள்ளத்துடன் கிறிஸ்தவ பகிர்தல் வாழ்வில் நம்மை ஈடுபடுத்த முயற்சிப்போம். உலக மக்களுக்காக தன் ஒரே மகனை சிலுவையில் பலியாக்கி தன் கடமையை நிறைவேற்றினார். நாமும் நம் அயலாருடன் உள்ளன்புடன் வாழ்வோம் நம்மால் முடிந்தவரை அயலவருக்கு உதவி செய்ய தபசு காலததில் திட சங்கற்பம் கொள்வோம்.

— நெடுநகர் நேசன்,

## உயிர்ப்பு தேவை

அவலங்கள் ஆணவங்கள் ஆக்கிரமிப்பிற்கு
அவனியில் உயிர்ப்பு
அமைதிக்கும் அன்பின் அரவணைப்பிற்கும்
அகிலத்தில் இறப்பு
சுகங்கள் சுகபோகங்கள் பெருகி
சூழ்ச்சியினால் சூறை யாடல்கள்
அகத்தினின் சுமை அகன்றிட
‘உண்மை’யின்(ல்) உயிர்ப்பு தேவை.

பிரிவுத்துயர்கள் பரிவிற்கான எக்கங்கள்
பெரிதாய் வளர்ந்து வாட்டுதே எம்மை
பீடை, படை, கோடை வரட்சிகள்
கொடுமையாய் கோரப்படுத்துதே.
உண்மையின் உயிர்வினை உரைத்தால்
உயிர் பறிப்புகளும் உருக்குலைவுகளுமிங்கே
வாய்ப் பூட்டுக்கள் ஓயாத வேட்டுக்கள்
ஒழிந்திட உண்மையின்(ல்) உயிர்ப்பு தேவை

கோபங்கள் பாவங்கள் பழிவாங்கல்கள்
கோரமாய் வளர்ந்ததால் கொடுமைகள் எங்கும்
கோ (ஆயுத) ஆட்சிகள் ஆக்கிரமிப்புக்களால்
அநியாய அழிப்புகள் இங்கும்
உள்ளங்கள் தோறும் ஊன்றிட்ட
கள்ளங்கள் நீங்க களிப்பிற்கு ஏக்கம்
உறங்கிட்ட உண்மைகள் விழித்தெழ
உண்மையி(ல்)ன் உயிர்ப்பு தேவை.

வஞ்சியூரான் ஏஸ். குயின்ரஸ்

## ஏனோ?

ஓ... பதம்பார்த்த சவுக்குகளே
பாசத்தாலே அவரை
பரிவுடன் தொட்டீர்களோ
பாக்கியசாலிகள் நீங்கள்

ஓ... முடியான முட்களே
செடியினின்று வந்த நீங்கள் — தலை
முடியையும் துளைத்துக்கொண்டு
முடியாக மாறினீர்களோ

ஓ... கடினமான கழுமரமே
காலதேவனைத் தாங்கி — அவர்
குருதி கொண்டு — உன்னை
குளிப்பாட்டிக் கொண்டனையோ

ஓ... கூர்மையான ஆணிகளே
அன்பனின் கைகளைத் துளைத்து
தூக்கியவை வைத்திருந்தீர்களே
நீங்கள் பாக்கியசாலிகள்

ஓ... மரணம்தனைக் கொடுத்த
மண்ணிறைந்த பூமியே
மன்னனை சிலுவையில் தாங்கி
மகிமை பெற்றாயோ

ஓ... வானத்து மேகங்களே
வானிலே சோகங்கள்
வருந்திக் கொண்டாடினீர்களோ
வான தேவன் இறப்பிற்கு

ஓ... அஃறிணைப் பொருட்கள் நீங்கள்
அன்பனிடம் அண்டிச்செல்ல
உயர்திணை மனிதனவன்
உன்னதனை உதறியதேனோ?

D. E. ரட்ணராஜ்
இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாகம வினாவிடைப் போட்டி - 23

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 13-4-89இற்கு முன் பாதுகாவலன் அ. பெ. இல-2 என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூபா 25/- விடையும் பரிசு பெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 20-4-89 இல் வெளிவரும். விடைகளை ரூத் ஆகமத்தில் காணலாம்.

**வினாக்கள்**

1. கேளியோனின் தந்தையின் பெயர் என்ன?
2. ரூத் எந்நாட்டைச் சேர்ந்தவள்?
3. இயேசுவின் பரம்பரை வரிசையில் சொல்லப்படும் நான்கு பெண்களில் இவளும் ஒருத்தி. இவள் பெயர் என்ன?
4. இதுவே இஸ்ராயேலில் உரிமை மாற்றத்தின் அடையாளமாய் இருந்தது. அது என்ன?
5. தாவீதின் தந்தையாகிய ஈசாயியுடைய தந்தையின் பெயர் என்ன?
6. "உனக்கு அன்பு செய்யும் மருமகளுக்குப் பிள்ளை பிறத்திருப்பது உனக்கு ஏழு புதல்வர்கள் இருப்பதிலும் சிறந்தது அன்றோ." யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

## வேதாகம வினாவிடைப் போட்டி-22 இன் விடைகள்

(1) சாமசன மக்கட் தலைவர்கள் இருந்த வீட்டைத் தாங்கின இரு தூண்களை வலக் கையாலும், இடக்கையாலும் பிடித்துக்கொண்டு "பிலிஸ்தியரோடு நானும் சாகக் கடவேன்" என்று கூறித் தூண்களை வன்மையுடன் அசைக்கவே, வீடுஇடிந்து அவர்கள் மீது வீழ்ந்தது (2) குருவுக்குரிய உடைகளும் சிலைகளும், (3) சாராவிலும் எஸ்தாவோலிலுமிருந்த தான் வம்சத்தாரில் அறுநூறு பேர் ஆயுதம் தாங்கி அங்கிருந்து புறப்பட்டு காரியாத்யாரிமில் தங்கினர். அன்றுமுதல் அவ்விடம் தானின் பாசறை என அழைக்கப்பட்டுவருகிறது. (4) தான் நகர், (5) யெருசலேம் (6) நானூறு கன்னிப் பெண்கள். (15-ஆம் பக்கம் பார்க்க)

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி-22

(சென்றவாரத் தொடர்ச்சி)

**போட்டி 21இன் முடிவுகள்**

**சரியான விடைகள்**

1. வண பிதா கலாநிதி தயானத்தன் பிரான்சீஸ்,
2. சம்பூர்ண வேதாகமம்
3. அபே போல் குற்றூசியர், பிரான்ஸ்
4. பிதா தோமஸ் குவான், சுன்டொங்
5. நான்சி பிரான்சில், ஆயர் டீ. வோபின் ஜன்சன்,
6. வம்சக்கால்.

**பரிசுபெறும் நற்பேறுளர்**

இ. யோசப் மக்ஷிமஸ், ஊறணி காங்கேசன்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

(1) இ. அன்ரனி, ஜெறோம், (2) டேமியன் றயன், (3) பொ. அலன் மிலர் ஜேம்ஸ்பொனிபஸ், (4) செல்வி மெற்றில்டா,தைரியநாதன், (5) அகஸ்ரின் யூட் அல்வின், (6) உதயன் அந்தோனிப்பிள்ளை, (7) சசி தாவீதுப்பிள்ளை, (8) எஸ். போஜினு, (9) காஞ்சனை பேனுட் (10) தனம் அல்போன்ஸ் (11) ஸ்ரீபன் பிரான்சீஸ் (12) ஜெயமதி கயித்தாம்பிள்ளை (13) சுபாஷினி அருளானந்தம். (18) ஞானேந்திரன் சந்தியாப்பிள்ளை, (19) அன்பழகி வின்சென்ற் (20) யோகினி அல்பிறட் (21) சுகந்தி அந்தோனிமுத்து (22) ஜெறின் அல்பிறட் (23) யூலியா மரிய கௌரி (24) நீற்ரு அந்தோனிமுத்து (25) றேகன பேனுட் (26) கௌசி துரைராசா (27) பாலதாஸ் பிரான்சீஸ், (28) ஷாம் சுரேஷ் சுந்தரலிங்கம் (29) லூசியா கிறேஸ் அருட்பிரகாசம் (30) மியூறிற் றூபி (31) ஏ. றூபியா (32) எல். தேவிகா (33) ஆன் அகஸ்ரின் (34) சுகந்தன் நவரட்ணசிங்கம் (35) எல். ஏர். கொன்ஸ்ரன் ரைன் (36) மேரி றுவீனு சபாநாயகம் (37) செல்வி ஞானரெத்தினம் (38) செல்வன் ஞானராஜ் ஞானரெத்தினம் (39) சி. மேரி றேஸ் (40) ரிமதி கொன்ஸ்ரன் ரைன் (41) சுதர் [illegible]னி சவரிமுத்து

## எதிர்பாருங்கள்!

பரிசுத்த தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தால் வருடாந்தம் நடாத்தப்படும்.

"இளைஞர் யுவதிகள் ஒன்று கூடல்" எதிர்வரும் 09-04-1989 ஞாயிறுவாரம் நடாத்தப்படும்—

இதுபற்றிய மேலதிக, முழுமையான விபரங்களை 31-03-1989 திகதிக் காவலனில் எதிர்பாருங்கள்.

இயக்குனர்




### மறை ஆசிரியர் ம. யேசுதாசனின்
## வீடு நோக்கி (ஒலிப்பதிவு நாடா)

இன்றைய சூழலில் ஈழத்து கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணர்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன. ஆயினும் உள்ள சூழ்நிலைக்கேற்ப இருப்பதைக் கொண்டு சிறப்புடன் தம் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முயற்சியில் அவர்கள் ஈடுபடுவதனையும் நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது

கத்தோலிக்கர் பலர் இசைத்துறையில் முன்னின்று உழைக்கத் தயங்கும் இவ்வேளையில் வியாபார நோக்கமற்று தயாரிப்பு செலவினங்களை மீட்டெடுத்தலே போதும் என்ற மனநிலையில் இசைத்துறையில் பலரது உள்ளங்களில் இடம் பிடித்தவரான மறை ஆசிரியர் ம. யேசுதாசன் 'வீடுநோக்கி' எனும் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு அதனை சுவைக்கத் தந்துள்ளார்.

இன்றைய சூழலில் மரணத்தின் நிழல் எம் வீடுகளில் படியும் பொது இறைபக்தியோடு நல்ல முறையில் சிந்திக்க வைக்கும் ஒரு முயற்சியே "வீடு நோக்கி" என்னும் பாடல்களின் தொகுப்பாகும். தனது இசை அமைப்பில் சில பாடல்களை வெளிக்கொணர அவர் எடுத்த முயற்சியின் வெற்றியாகவே இவை அமைந்துள்ளது.


எம்மிடம் உள்ள குறைந்த வசதிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இவ் ஒலிப்பதிவு நாடாவை பலவேறு வசதிகளுடன் கூடிய வேற்று நாட்டு ஒலிப்பதிவு நாடாக்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது தவறாகும். ஆசிரியர் ம. யேசுதாசன் அவர்களின் திறமைக்கு போதிய களம் அமைத்தால் மேலும் பல நல்ல படைப்புக்களை எதிர்பார்க்கலாம். இவரது திறமையை எமது கத்தோலிக்க உலகு நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் ஒரு "வீடுநோக்கி" ஒலிப்பதிவு நாடாவை வாங்கி ஊக்குவித்தால் வரவிருக்கும் திருவழிபாட்டுக் காலங்களோடு ஒட்டிய பாடல்களை இசையோடு இணைத்து தரமாக வெளியிடத் துணைநிற்கலாம்.

இத்துறையில் புதிய பல கலைஞர்களை வெளிக்கொணரும் அரிய சேவை ஆற்றிவரும் மறை ஆசிரியர் ம. யேசுதாசனின் அயராத முயற்சிக்கு எமது ஆதரவே இன்றைய காலத்தின் தேவையாகும்.

— யோசெப் பாலா



## வாசகர் கருத்து



பாதுகாவலன் பத்திரிகையின் ஒவ்வொரு வார இதழையும், அதன் இதமான நறுமணத்தையும், தமிழ்ச்சுவையையும், கவிதைகளையும், சிறுகதைகளையும் நுகர்ந்தேன். முக்கியமாக "ஊனம் அவன் மனசுக்கல்ல" என்ற "றேகான் ஸ்ரனிஅன்ரனியின் சிறுகதை சிறப்பாக அமைந்திருந்தது. மேலும் "பழமொழி ஆகமமும் புதுமொழியும்" எஸ். ஏ. நாதரின் ஆக்கம் மிகவும் அழகாகவும், சிந்தனையைத் தூண்டிவிடுவதாகவும், அறிவை செம்மைப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. இது எனக்கும் வாசக நேயர்கள் அனைவருக்கும் பயன் தரத்தக்கதாக இருக்கின்றது. இதைப்போன்று பயன்தரத்தக்க ஆக்கங்களை அளிக்குமாறு வேண்டுகிறேன்.

பாதுகாவலன் பணி வளர்க!

செல்வி. த ஜெனிவி
பெர்ணண்டோ.
சின்னக்கடை
மன்னார்.

## மூன்றும் ஆண்டு நினைவு அஞ்சலி



பத்தலோமை பிலோமினு
மலர்வு: 22-05-1937
உதிர்வு: 26-03-1986



தம்பிராசா றோசம்மா
மலர்வு: 20-02-1922
உதிர்வு: 13-04-1986

பரம பிதாவே, எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் மங்காத மாணிக்கங்களாய் எங்களின் நல்வழி காட்டிகளாய் இருந்து எங்களை விட்டுப்பிரிந்த அன்புத் தெய்வங்களுக்கு உமது திருக்குமாரன் பாடுபட்டுச் சிந்திய விலைமதிக்கமுடியாத திரு இரத்த பலன்களைப் பார்த்து நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

இவர்களின் பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்
உற்றார், உறவினர்.

372. கடற்கரைவீதி,
நாவாந்துறை,

## 13ஆம் வருட நினைவஞ்சலி



ம. மரியதாஸ்
(செல்வநாயகம்)
மலர்வு: 07-04-1956 உதிர்வு: 20-03-1976

ஆண்டு பதின்மூன்று மறைந்தாலும் உம் அன்புருவம் எம்மைவிட்டு நீங்காது என்றென்றும் நினைக்க மனம் வேகுதையா எல்லோருக்கும் நல்லவராய் இருந்திங்கு சேவை செய்தீர். இனிதாக உம தான்மா இறைவனடி சேர்ந்து இளைப்பாற இறையருளை வேண்டுகின்றோம்! இவரின் ஆன்மசாந்திக்காக எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் 20-03-1989 திங்கள் காலை 6-30 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்: தந்தை, தாய், சகோதர சகோதரிகள், அண்ணிமார், சிறிய பிள்ளைகள். A/51.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியப் போட்டி 4 - இயேசு சிலுவை சுமத்தல்



1-ம் இடம் செல்வி அ. சாளற், 18/B, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

2-ம் இடம் எம். எல். பிரான்சிஸ் இல. 38, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

3-ம் இடம் டானியலா தேவதாஸ் 43, சோமசுந்தரம் அவனியூ, யாழ்ப்பாணம்.

ஓவியப் போட்டி 5 - "இயேசுவின் உயிர்ப்பு"

போட்டி முடிவுத் திகதி 20-4-89

அடுத்த போட்டி 27-4-89

# அரியாலை அன்பகத்தில் அருள்மழை

கிறிஸ்தவ வாழ்வு கடவுள் அன்பு, சேவை, செபம், திருப்பலி என்னும் நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்படவேண்டும். இவ்வாறு வண. பிதா. யேசுநேசன் அ. ம. தி. அவர்கள் அரியாலை அன்பகத்தில் ஞானஒடுக்கம் போதிக்கையில் சிறப்பாக எடுத்துரைத்தார்.

சேவையைப்பற்றி அடிகளார் கூறும்போது, தந்தையின் மகிமைக்காக, நாம் புறக்கணிக்கப்பட்டாலும் கடவுளின் வார்த்தையைப் போதிக்கவேண்டும். எமது சேவை மீட்பை மையமாக வைத்து அமையவேண்டும். நாம் செய்வது அல்ல, நாம் யாராக இருக்கிறோம் என்பதே முக்கியமானது. வேலை, வழிபாடு, சாட்சியம் பகர்தல் இம் மூன்றுமே முக்கியமானது என்றார்.

குழு வாழ்வில் நாம் சேவையாற்றும்போது, எமது சேவையில் மற்றவருக்கு உரிமையுண்டு என்னும் கருத்தைப்பற்றி மிக விரிவாக எடுத்துரைத்தார். மீட்பை நோக்கியே எமது குழு வாழ்வு அமையவேண்டும் வேலை சேவையல்ல, சேவையின் கோணம்பற்றி அடிகளார் உரையாற்றுகையில், எதிலும் தூய்மையுள்ள சேவை மூலம் தான்சாட்சி பகரும் அப்போஸ்தலிக்க வாழ்வு வாழமுடியும். அதற்குக் கிடைத்த அழைத்தலைத்தான் இன்று பெற்றுள்ளீர்கள். அதன் மகத்துவத்துக்கு ஞானவாழ்வு என்றும் துணை நிற்கவேண்டும்.

மக்களோடு பிரசன்னமாக இருந்து, குறை நிறையை எடைபோட்டுப் பார்க்கவேண்டும். துன்பங்களை நாம் எதிர்நோக்கினாலும் அப்போஸ்தலிக்க சேவையில் ஈடுபடவேண்டும்.

நடைமுறையில் நேரமில்லை என்று சாட்டுப்போக்குச் சொல்லாது, எம்மிடம் மற்றவர் ஏரக்கூடிய அளவு இதய சுத்தியுடன் அனுதாபங்காட்டி, சிந்தனையுடன் செயலில் ஈடுபட்டு எமது சேவையில் நாம் திருப்தியடையவேண்டும். தாழ்ச்சியே உண்மை என்பதற்கேற்பத் தாழ்ச்சியோடு சேவை செய்யவேண்டும் என்றார்

இறைவனை இன்று பல தோற்றங்களில் எம் எதிரே காணுகின்றோம். அவர்களிடம் சேவையாற்றும்போது எதனையும் எதிர்பார்த்துசெய்தால் அது ஏமாற்றத்தையேதரும். அந்தச் சேவையில் பல தூய பணிகள் செய்தாலும் ஏச்சுப் பேச்சுப், குறைகளையும் குற்றங்களையும் கூறும்போது துவண்டு விடக்கூடாது. அங்குதான் நீங்கள் கிறிஸ்துவாகின்றீர்கள். இதேநிலை கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட ஒன்றே. இவற்றை தாங்கும் மனத்திடத்தை செபத்தின் மூலம் வேண்டிக் காள்ளவும் இருளில் கிறிஸ்துவாக மாறுங்கள் என்றார்.

வரப்பிரகாசம் வின்சென்ற்.

## உயிர்ப்பினில் விடுதலை

பிறப்பு
இருள் தனை அகற்றி
அருள் தனை வழங்க
ஏழையின் மடியில்
ஏழ்மையின் வடிவாய்
பாரினில் அவதரித்தார்
பரமன் இயேசு.

பாடுகள்
பாவி என்ற மனிதனுக்கு
பாவம் என்ற பிணிபோக்க
பாரமான சிலுவைதனை
பாரினிலே பகிரங்கமாக- ஏற்று
விடுதலையின் இறுதி இடமான
கல்வாரிதனை நோக்கினார்.

மரணம்
தன் இனமதை மீட்க
தன் இரத்தம் சிந்திவிட்டு
கயவர்களின் மத்தியிலே
கழு மரத்தின் உச்சியிலே
மண்ணுலகை விட்டு
விண்ணுலகு ஏகினர் வீரன் இயேசு.

உயிர்ப்பு
கல்லறையின் கல் கவிழ
காவல்களின் மத்திபிலே
காரிருளின் நடுவினிலே
காட்சியுடன் ஜெயித்தார்.
கையில் கொடியுடனே
காட்சிபல சீடர்களிடம் காண்பித்தார்.




யா. யூலன் குருஸ்
பேசாலை.

## இறைவன் நம்மைச் சந்திக்கும் காலம் இதுவே

### உரும்பிராய் பங்கில் தவக்கால தியான நாட்கள்

இம்மாதம் 5-ம், 6-ம் திகதிகள் உரும்பிராய் பங்கில் தவக்கால தியான நாட்களாக அனுஷ்டிக்கப்பட்டன.

5-ம் திகதி காலைச் செபத்துடன் தியான நாட்களை ஆரம்பித்து வைத்தார் அருள்திரு ஜீவா போல் (அ.ம.தி) அடிகள்

அன்று சிறுவர், இளைஞர் யுவதிகள், மாதா கூட்ட அங்கத்தவர், திருமணமான ஆண்கள் போன்றோருக்கு வெவ்வேறு வேளைகளில் கரத்தரங்குகள் நடாத்தப்பட்டன. மாலையில் திருப்பலியும் மறையுரையும் இடம் பெற்றன.

2-ம் நாள் காலைச்செபத்துடன் திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு அந் நாள் முழுவதும் பங்கு மக்களின் ஆராதனைக்காக வைக்கப்பட்டது. அன்று நோன்பு தினமும் அனுசரிக்கப்பட்டது

மேலும் திருமணமான பெண்கள், O/L, A/L, மாணவ மாணவிகள் போன்றோருக்கு கருத்தரங்குகள் இடம் பெற்றன. மாலை 3 மணிக்கு ஒப்புரவு அருள்சாதனத்திற்காக பல பங்குகளிலிருந்து குருக்கள் வந்திருந்தார்கள். சிறியோர் முதல் பெரியோர் வரை இச் சடங்கில் பங்குபற்றி இறை மனித உறவுகளை புதுப்பித்துக் கொண்டவர்கள் இதனைத் தொடர்ந்து திருப்பலியுடன் தவக்கால தியான நாட்கள் முழுமை பெற்றன.

கருத்துரைகளையும், மறையுரைகளையும் வழங்கிய அருள் திரு ஜீவா போல் அடிகள் இறைவன் நம்மைச் சந்திக்கும் காலம் இதுவே எனவே நாம் எமது பாவ அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெற்ற மக்களாக இறைவனுக்கும், அயலவர்க்கும் அன்புப் பணி புரிந்து வாழ வேண்டும் என்ற கருத்துக்களை பற்பல வழிகளில் உணர்த்தி நின்றார், எமக்கு கருத்துரை வழங்கிய குரவருக்கும், இம் மாபெரும் சந்தர்ப்பத்தை ஒழுங்கு செய்த பங்குத் தந்தை அருள்திரு. R. C. X. நேசராஜா அடிகளார் அவர்கட்கும், அவரோடு இணைந்து செயலாற்றிய அருட்சகோதரன் இயூஜின் பிரான்சிஸ் அவர்களுக்கும் பங்கு மக்கள் நன்றி கூறினர்.

தகவல்: வசந்தி இரஞ்சிதம்

## ஊர்காவற்றுறை பங்கில் தவக்கால ஞான ஒடுக்கம்

ஊர்காவற்றுறை பங்கில் உள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கான தவக்கால ஞான ஒடுக்கம் சென்ற ஞாயிற்றுக்கிழமை 12-ம் திகதி ஊர்காவற்றுறை புனித மரியாள் பாடசாலையில் காலை 7 மணியளவில் சிலுவைப்பாதையுடன் ஆரம்பமாகியது. இங்கு உரையாற்றுவதற்கு அருள்திரு J. நீக்கிலஸ் அடிகளாரும், அருள் சகோதரர்கள் கருணைரெட்ணம், யூஜின் அவர்களும், அருட்சகோதரி திரெசிற்று அவர்களும், ஆசிரியை எலிசபெத் அவர்களும் வருகை தந்தனர். அவர்களுடைய உரையில் இத்தவக்காலத்தில் நாமும் சக்கேயுவைப் போல் மனமாற்றம் பெற்று யேசுவைக்காண ஆசையுள்ளவர்களாய் அவரை எப்படி காணலாம் என்று சிந்தித்து முயற்சி எடுத்தால் எப்படியும் இயேசுவைக் காணலாம் என்ற கருத்து சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டது. இந்த ஞான ஒடுக்கம் தகுந்த முறையில் சிறப்பாக இத்தவக்காலத்தில் மாணவர்கள் மனமாற்றம் அடைந்து புதுவாழ்வு பெற மிகவும் பயனுள்ளதாய் அமைந்தது. 11.30 மணியளவில் அருட்திரு நீக்கலஸ் அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஞான ஒடுக்கம் இனிதே நிறைவு பெற்றது.

தகவல்:-
நீற்று சிவந்தி கொலின்ஸ்
மேற்கு வீதி
ஊர்காவற்றுறை.

## வேதாகம வினாவிடைப்போட்டி22 இல்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாராட்டுப் பெறுவோர்:

தர்மலிங்கம் எவாஞ்சிலின், அ. கிறிஸ்ரின் சுமலரூஜி, யே. மரியா அருளரசி, செலஸ்ரீன் றேஜினி, இ. போல் ராஜராஜன், செ. பேரின்பராணி. ஆர். தமயந்தி, பி. சுகந்தி, கா. மேரி அலஸ்ரீனு, காணிக்கை பிரிட்டோ, அ. நியூட்டன், கூஞ்ஞு, யே. ரி. தியோனிஸ், கி. ஜெயராஜ், கா அலன்ரின் அ. அசம்ரா யோகமலர், செ. மேரி அன்ரனிற்று, எஸ். டேஜினு, வேதநாயகம் கிங்ஸ்லிகுமார், பி. ஜெயராணி, அ. யோண் பிரகாஸ், ம. சிங்கராயர் சறேஷினி, ஜெயமதி கயித்சாம் பிள்ளை, லோ. ஏரோனியா, சாந்தி லெம்பேட், ஏ. நிலா, எம். றொபேட், ஞா. றெஜி குருஸ், எஸ். எறிக் யோசப், ஞா. வசந்தசீலன், எ. கலைச்செல்வி எமிலியானுஸ்பிள்ளை, ச. ஜக்குலின், இ. ஜெயக்குமார், ச. அன்ரன் ஜெனஜோஜ், தே. ஜெனிவா குலாஸ், நவரட்ணம் ஜெகப்பிரியன், ச. அன்ரன் ஜென்யூட், மேரி மாகரட் மைக்கல், ச. பிரபாகரன், ஆ. சான் பெனற், யே. டீபா சொய்சா, ச. பியூவா, ஜி. விஜயா, செல்வி வதனி யாக்கோபு, ய. ஜெபநேசன், செல்வி டொடா றிச்சாட், எஸ். ஏ. ஜோசவ், செல்வி அ. சாமிநாதன், அ. மத்தியாஸ் இதயறஞ்சினி, ஆன் சுபோதினி சூசை, ம சாந்தி, யே. யூட் யேசுநேசன், பா. மேரி கொலஸ்ரிக்கா, மி. யசிந்தா நிர்மலாதேவி, ஏ. ஜெனிவா ஆரோக்கியநாதர், சுறேந்திரன் மருசலீன், ஆ. வினிஷியா சுறேந்தினி, அ. செல்வருஜ் லெம்பேட், என். கௌரி குலாஸ், செல்வி சுபேந்தினி பீற்றர், சோபியா ஏபிரகாம், மேரி யூடித் யூலியஸ்

பரிசுபெறும் நற்பேறுளர்: வொலன்ரினு செ.
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## பழைய குருமடத்தில் புதிய பணிகள்

வன்செயல்களின் காரணமாக திருமலை உப்புவெளி கடற்கரையில் அமைந்த குருமடம் 1984-ம் ஆண்டு மட்டு நகருக்கு மாற்றப்பட்டுள்ளது. தொடர்ந்துநடந்த வன்செயல்களினால் அச்சிறிய குருமடத்தில் பணிகள் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அச்சிறிய குருமடம் புனர் அமைக்கப்பட்டு தற்பொழுது அங்கு பல கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. ஞான ஒடுக்கம், கருத்தரங்குகள் போன்றவை நடைபெறுவதற்கு ஏற்ற முறையில் இச்சிறிய குருமடம் ஒரு சில மாற்றங்களுடன் புதிய காட்சி அளிக்கிறது. ஞானஒடுக்கங்கள், கருத்தரங்குகள் ஒழுங்கு செய்பவர்கள் பழைய சிறிய குருமடத்தைப் பயன்படுத்தலாம். அங்கு தங்கி நிற்கும் தினங்களில் உறைவிடம் முதல் உணவு வரை எல்லாம் ஒழுங்குசெய்து தரப்படும். இதை பயன்படுத்த விரும்புகின்றவர்கள் :- அருள்திரு. லியோ, சமூக சேவை நிலயம், திருகோணமலை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## கேரளத்தில் புதிய குருமடம்

ஆல்வாய் புனித சூசையப்பர் குருத்துவக்கல்லூரியில் நடந்த ஓர் உயர்மட்டக்கூட்டத்தில் குருக்களைப் பயிற்றுவதற்கான சில திட்டங்கள் முன் வைக்கப்பட்டன.

600 மாணவரைக் கொண்டுள்ள இக்கல்லூரி உலகிலேயே பெரிய குருமடமாகும்.

கல்வி நிலையத்தை மாணவர் விடுதியிலிருந்து பிரிப்பதும், குருமடத்திற்கு மேலும் பல ஆசிரியர்களைச் சேர்ப்பதும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட வேறு சில ஆலோசனைகளாகும்.

கேரள ஆயர் பேரவை இந்த ஆலோசனைகளை ஆராயும். கேரள திருச்சபையின் இந்த அவசிய தேவை பற்றிக் குறிப்பிடுகையில், கேரளத்தில் அழைத்தல்கள் அதிகமாக இருந்தபோதிலும் இந்தியாவின் மூன்றிலொரு பகுதியான குருமடங்களே கேரளத்திலிருப்பதாக பேராயர் மார் கிறகோறியோஸ் குறிப்பிட்டார்.

கேரளத்தில் தற்போதுதிருத்தந்தையின் புனித சூசையப்பர் குருமடம், கோட்டியம் புனித தோமஸ் குருமடம், திருவனந்தபுரம் புனித மரியாள் குருமடம், ஆகிய மூன்று பெரிய குருமடங்கள் உள்ளன.

## ஆசிய ஓவியப் போட்டி

பரிசு ரூபா 3000/-, 2000/-, 1000/-,
27 ஆறுதல் பரிசுகள்
கரு: ஆசிய கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்
இறுதி நாள்: 30-4-1989
மேலதிக விபரங்கள் அடுத்த இதழில்

## தேம்பாவணி விழா

கத்தோலிக்க இலக்கியத்தைப் பற்றி அறிய, அதை வளர்க்க விருப்புகிறீர்களா?

தமிழ் இலக்கியத்தில் காவியம் என அழைக்கப்படும் "தேம்பாவணி"யைப் பற்றி கற்ருேர் கூறும் கருத்துரைகளைக் கேட்க வேண்டுமா? வாருங்கள், கலந்து கொள்ளுங்கள்.

இடம்:- யாழ். மறைக்கல்வி நடுநிலையம்
காலம்:- சித்திரை 2, 1989 (02-04-89)
ஞாயிறு காலை 8-45 முதல் மாலை 6-00 வரை
நிகழ்ச்சிகள்:- ஆய்வுரைகள், கலை நிகழ்ச்சிகள்.

★

## "மலைமேல் வீழ்ந்த துளிகள்"

என்னும் பத்தி இசை — உரை — நாடகச் சித்திரத்தின் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா வெளிவந்து விட்டது அதைப் பெறக் கூடிய இடங்கள்:

திருமறைக்கலா மன்றம் "இசைப் பகுதி"
223 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
மறைக் கல்வி நடுநிலையம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவு இல: QB / 1001/58/81

## 'உண்மைஉயிர்த்தது'

உண்மைக்கு கல்லறை
கட்ட முடியுமா?
அது
எப்படியாகும்?
உண்மையே வடிவான
இயேசுவை
சிலுவையில் அறைந்து
கொன்ற நயவஞ்சகர்கள்,
உண்மையை
கல்லறையில் அடக்கம்
செய்தனர்.
இருப்பினும்...
உண்மைகள் எப்படி
உறங்க முடியும்?
உண்மைக்கு
இலக்கணமாகிய கிறிஸ்து
சாவு என்ற
அடிமை நிலையை
உடைத்தெறிந்து
வெற்றி பெற்ருர்.
எனவே
உண்மை உயிர்த்தது,
சாவு வீழ்ந்தது,
வெற்றி கிடைத்தது.
"உயிர்ப்பும் உயிரும் நானே"
என்று மொழிந்த—அந்த
உண்மை,
எமது மண்ணக
அடிமைத் தழைகளை
வேரறுக்க
உயிர்த்துவிட்டது.
இன்று...
எமது சமுதாயத்தில்
உண்மைக்கு
நீதிக்கு
அன்புக்கு எதிராக
எத்தனை கல்லறைகள்
அமைக்கப்பட்டுள்ளன.
நாம்
கல்லறையில்
வெறும் பிணத்தை மட்டும்
அடக்கம் செய்யவில்லை.
மாருக...
உண்மையையும்
அடக்கம் செய்கின்ருேம்.
உண்மைகள்
எப்படி உறங்க முடியும்?
நாளாந்தம்
இப்பரந்தவுலகிலே
பல உள்ளங்கள்
இயங்க முடியாமல்
தடுமாறுகின்றன,
தத்தளிக்கின்றன—அந்த
உள்ளங்களுக்கு
மறு வாழ்வளிக்க
உண்மை உயிர்த்துவிட்டது.
போரும், பூசல்களும்
நிறைந்த
இந்தக் காலகட்டத்தில்
எந்த வேளையிலும்
உண்மைக்கு
சாவு மணி அடிக்கலாம்.
ஆனல்...
உண்மைகள்
ஒரு போதும் உறங்காது.
ஏனென்ருல்
உண்மை உயிர்த்து
விட்டது — அது
சாவை வென்றுவிட்டது.

—செ. றெபின்சன் ஜோ
தாழையடி.

## கிறிஸ்துவின் பாஸ்காவில்....



### வாகைச் சுடர்

யாழ். திருமறைக் கலாமன்றம் "வாகைச்சுடர்" எனும் யேசுவின் இறப்பு — உயிர்ப்புவிழா-1989 சிறப்பு மலரை வெளியிட்டுள்ளது. அதில் ஓவியத்திலும் பாநயத்திலும் நமது விசுவாச அறிக்கை என்ற தலைப்பில் "மூன்ரும் நாள் உயிர்த் தெழுந்தார்" என்பதைச் சித்தரிக்கும் படம் இது.

## .... சமுதாய உருமாற்றங்கள்

ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வளிக்க, முடியுடன் நாடாளும் வேந்தர்களின் ஆணவத்தை அடக்க, அரசியல் லாபத்துக்காகமக்களை ஏமாற்றி வாழும் நயவஞ்சகர்களை நசுக்க, சாதி என்ற கட்டுப்பாட்டினுல் தள்ளாடுவோருக்கு புதுவாழ்வு கொடுக்க, மக்களின் சம்மதமின்றி, விருப்பமின்றி அரசியலில் சொந்தநலனுக்காக குதித்திருப்போரின் குதிக்காலைத் தீண்ட, அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்பால் நசுக்கப்படும் நாடுகளைத் தூக்கிவிட, மரணத்தின் மத்தியிலும் மறுவாழ்வு உருவாக்க, சொந்தபந்தங்களை ஆயுதத்திற்கு இரையாக்கி கதறுவோருக்கு ஆறுதளிக்க, சமய சடங்குகளின்றி கண்ட கண்ட இடங்களில் எல்லாம் துப்பாக்கி வேட்டுக்கு இரையாகி மரணித்த ஒவ்வொரு உயிருக்கும் ஆன்ம சாந்தியோடு — அவர்களின் ஆசை நிறைவேற்ற, இவற்றை எல்லாம் ஆயுதத்தால் அல்ல அன்பால் உருவாக்க- சாவை வென்ற சத்தியகை, காலத்தைக் கடந்த கடவுளாக முள்முடி சூடிய மன்னவன் ஜெகவீரராக எம்முன் தோன்றுகிருர்.

செல்வி. அ. அமலராஜேஸ்வரி
வட்டாரம்- 8
நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு

சாவின் கட்டுக்கள்
நொருங்கட்டும்
சத்தியத்தின் ஒளி
பரவட்டும்
வையத்து வாழ்வு
வளம் பெறட்டும்

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னேடிருக்கிருேம் என்கிருர் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org